ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி    சமய - சமூக - இலக்கிய வெளியீடு    ஜூன் 2010    25/=



"இலங்கை இனச் சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது என்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கூறிவருகிறார். இதை மற்றவர்களும் நம்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்"

- லீ குவான் யூ








விவேக் ஒபராய்

எப்படியாவது இந்தியாவைச் சமாளித்துவிட வேண்டும் என்பதில் அரசு அசுர வேகத்தில் செயற்படுகிறது என்பதை IIFA, CEPA நடவடிக்கைகள் பிரதிபலிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஜுன் 2010

மலர்: 42 இதழ்: 05

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.

## உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| அடுத்தவர் வாழ்வும்... | : | 02 |
| மூன்று கிறித்தவ... | : | 04 |
| வரம் (கவிதை) | : | 06 |
| என்ன சத்தம்... | : | 07 |
| மனதை மாற்ற முடியாது | : | 09 |
| ஆசியாவில் புனித... | : | 10 |
| உன்னையே நீ... | : | 11 |
| குருக்கள் ஆண்டு... (தொடர்ச்சி) | : | 13 |
| அது ஒரு... (கவிதை) | : | 17 |
| மொழி என்பது... | : | 18 |
| கடுகுக் கதை | : | 19 |
| மாணவர் பக்கம் | : | 20 |
| மருத்துவம் (சிறுநீரகங்களின்...) | : | 21 |
| இலக்கிய மஞ்சரி | : | 23 |
| விவிலியம் கற்போம் | : | 27 |
| அறிவை வளர்ப்போம் | : | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

"அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுவோம்" என்னும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூற்று தமிழ் ஆர்வலர்களைச் சிந்திக்கத் தூண்டியிருக்கிறது. எதிராளியாக இருந்து இழந்தெல்லாம் போதும், கூட்டாளியாகியாவது பெறமுடிந்ததைப் பெற்றுக்கொள்வோம் என்னும் முடிவுக்கு வந்துவிட்டார்கள் போலும். இதுவரைகாலமும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எந்த அரசும் தங்களை அழைக்கவில்லை என்ற ஆதங்கத்தையும் வெளியிட்டு, தம்பிமாரை நம்பி நடுத்தெருவுக்கு வந்து கையேந்தவும், கைகோர்க்கவும் வேண்டிய நிலமையைத்தான் தம்பிமார் மிகுதியாக விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று இப்போது பெருமூச்சு விடுவதும் கேட்கிறது. நாட்டில் கிடைக்காத ஈழம் நாடு கடந்து கிடைக்க ஏற்பாடுகள் வேறு. இதை யார் காட்டிக்கொடுப்பாரோ தெரியவில்லை. யார் காதிலும் யாரும் பூ சுத்தாமல் இருந்தால் சரி.

அரசுடன் இணைந்து செயற்படுவது எவ்வளவு தூரத்திற்குத் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மூன்றாவது முறையாகவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆசனத்தில் அமர ஆசைப்படும் மஹிந்த ராஜபக்ஷ இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவாரா? தெளிவான தீர்வுக்குக் குறுக்கே நிற்கப் போகும் பௌத்த சமய பீடத்தையும் அதனைச் சார்ந்த கட்சிகளையும் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் உடன்பட ஆவன செய்வாரா?

நவீன சிங்கப்பூரைக் கட்டியெழுப்பிய சிற்பியும் முதல் பிரதமருமாகிய மதிப்பிற்குரிய லீ குவான் யூ அவர்கள் "மஹிந்த ராஜபக்ஷ ஒரு சிங்களத் தீவிரவாதி, அவரது மனதை மாற்ற முடியாது" என்று பேட்டியளித்திருப்பதைப் பார்க்கும்போது லீ குவான் யூ என்னும் ஞானி வெறுமனே ஒரு ஜனாதிபதியைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பாரா? எனவே, தற்கால அரசியலில் இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்போவதில்லை என எண்ணத் தோன்றுகிறது.

மீள்குடியேற்றங்களைப் பற்றியும், புனர்வாழ்வு பற்றியும், முகாம்களில் உள்ளவர்கள் சீர்திருத்தப் பள்ளிகளில் இருப்போரது விபரங்களை வெளியிடுதல் போன்றவை பற்றியெல்லாம் பேச்சு வருகின்ற இந்தக் காலப்பகுதியில் வெறுமனே தள்ளிவிடப்பட்டுள்ள அல்லது கொண்டுபோய்ப் போடப்பட்டுள்ள வன்னித் தமிழ்ப் பெண்களை சிங்களச் சிப்பாய்கள் துவம்சம் செய்கின்றார்களே! இதைப் பற்றி யார் சிந்திப்பார்? இந்த அவலத்தை விட முகாம்களிலே தங்கவைத்துக்கொண்டு வன்னியில் அடிப்படை வசதிகளையம் பாதுகாப்பையும் உறுதிசெய்த பிற்பாடு குடியேற்றியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

எப்படியாவது இந்தியாவைச் சமாளித்துவிட வேண்டும் என்பதில் அரசு அசுர வேகத்தில் செயற்படுகிறது என்பதை வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது. IIFA, CEPA ஏற்பாடுகள் எல்லாம் இவற்றின் பிரதிபலிப்புகள்தான். IIFA தோற்றுவிட்டது. அதற்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற சினிமாத் துறையினருக்குத்தான் சலாம் போடவேண்டும். CEPAவும் நிச்சயம் தோற்றுவிடும். ஏனெனில், விமல் வீரவன்ச உள்ளிருந்தே இதற்கு எதிராகக் குரைக்கத் தொடங்கிவிட்டார்.

திருத்தந்தை பிரகடனப்படுத்திய குருக்களுக்கான ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதியோடு நிறைவு பெறுகிறது. ஆனால், எமது மறைமாவட்டம் இவ்வாண்டு முழுவதும் "கிறிஸ்துவின் பிரமாணிக்கம் குருக்களின் பிரமாணிக்கம்" என்ற கருப்பொருளில் சிந்திக்கவும், குருத்துவத்தின் மகிமையை எடுத்தியம்பி தேவ அழைத்தலைத் தூண்டவும், திருநாள் நாட்களில் மறையுரைகள் ஊடாக குருக்களும் பொதுநிலையினரும் எவ்வாறு இணைந்து புரிந்துணர்வோடு பணியாற்றலாம் என்ற விளக்கங்களையும் பெற்றுக்கொள்ள வழிசமைக்கப்பட்டுள்ளது. ஆகவே குருத்துவத்துக்காக, குருக்களுக்காக, மறைமாவட்டத்திற்காக தொடர்ந்து செபிப்போம். அனைவரும் இணைந்து பணி புரிந்து இறையரசைக் கட்டியெழுப்புவோம்.

- ஆசிரியர்



## இறைவாக்கு

**"எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். அதைக்கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்துவிட முடியும்"**

(எபே: 6:16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆதித் திருச்சபையை வளர்த்தெடுப்பதிலும் இறைவார்த்தையைப் பரப்புவதிலும் மக்களை விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்துவதிலும் மட்டும் இயேசுவின் சீடர்கள் ஈடுபட்டதோடு நின்றுவிடவில்லை. அதாவது ஆன்மீகப் பணியை மட்டும் கருத்தில் கொண்டதாக அவர்களது பணி இருந்துவிடவில்லை. அத்தோடு கூட அம்மக்களது சமூக வாழ்வு, ஒழுக்கநெறி, மற்றவர்களுடனான உறவு - நடத்தை முறைகள் - அயலவர்கள் மட்டில் இருக்கவேண்டிய கரிசனை - காட்டவேண்டிய அன்பு குறித்தும் அக்கறை காட்டினார்கள். ஆன்மீக விருந்து போன்று மக்கள் நாளாந்தம் போஷிக்கப்படவும் அவர்கள் ஈடுபாடு காட்டினார்கள். தூய பவுல்கூட இதில் முனைப்பாக நின்றவர்தாம்.

வறியவர், வகையற்றோர், ஏதிலிகள், விதவைகள், யாருமற்றோர் என்று சமூகத்தில் துன்புறுவோருக்காகவும் அவர்கள் செயற்பட்டார்கள். இதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைச் செயற்படவும் வைத்தார்கள். எவர் எவருக்கு உதவிகள் வழங்கலாம் என்று வகைப்படுத்தியும் கொடுத்தார்கள். துன்புறுவோர் மட்டில் மற்றவர்கள் மனதில் அக்கறை தோன்றச் செய்து ஆதார வகைகளைச் சேகரித்துப் பகிர்ந்து கொடுத்ததாக வரலாறு கூறுகிறது.

கிறிஸ்து வாழ்ந்த வரையிலும் ஏழை எளியவருக்கு முன்னுரிமை வழங்கினார். அவர்கள் பசியோடிருந்தபோதெல்லாம் வெறுங்கையாலேயே அவர்களுக்கு உணவளித்தார். ஆம், அவரிடம் எதுவுமே இருக்கவில்லை. இருந்தும் கிடைத்ததைக் கொண்டு ஆயிரக்கணக்கானோருக்கு வயிறார உண்ணக் கொடுத்தார். "பசியோடிருந்தவர்களை, அரைகுறையாய் நின்றவர்களை, நீதியின் மேல் தாகங் கொண்டிருந்த உள்ளங்களை" அழைத்து அவர்கள் "பாக்கியம் பெற்றவர்கள்" என்று அவர் சொல்லிக் காட்டிய வரலாற்றைத் தெரிந்தவர்கள், ஆதித்திருச்சபையில் வகையின்றி இருந்தவர்களைத் தீவிரமாக ஆதரிக்க முற்பட்டார்கள். உள்ளவர்கள் இல்லாதவரோடு பகிர்ந்துகொண்டார்கள். நோயுற்று, பிணியுற்று இருந்தவர்களைப் பராமரித்தார்கள். இவ்வாறாக 'அயலானை அன்பு செய்யும்படி' கிறிஸ்து இட்ட கட்டளையை போதனையோடு நின்றுவிடாது, அதைச் சாதனையாகவும் பண்ணி வாழ்ந்தார்கள்.



தூய பவுல் போன்றோர் தேவையான ஒழுங்கு முறைகளை வகுத்துக்கொடுத்து, இந்தச் சமூகப் பணிகள் சீரிய முறையில் தொடரப்படுவதைத் தமது வழிகாட்டுதல்கள், எழுத்துகள் மூலம் உறுதிப்படுத்தினார்கள். மக்களை ஒருவர் ஒருவருக்காக வாழவைத்தார்கள். இது மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாகவும், தூண்டுதலாகவும், புதிய வாழ்க்கை முறையாகவும் இருந்தது, சிந்திக்கவும் வைத்தது. வேதம் புகுந்த நாடுகளில் கிறிஸ்தவர்களது வாழ்க்கைப் போக்கினைக் கண்டவர்கள் தாமும் அவர் போலாகியதோடு நின்றுவிடாது அடுத்தவர்காக வேதசாட்சிகளாகவும், புனிதர்களாகவும் தம் வாழ்வை மேலாக்கிய வரலாறு நம்மோடு இன்றும் வாழ்கிறது.

இன்றைய எமது வாழ்விலும் அடுத்தவர் மட்டில் ஒரு விழிப்புணர்வு ஏற்படவேண்டும். அடுத்தவர்க்கு எம்வாழ்வில் இடந்தரவேண்டும். நமக்குள்ள அனைத்தையுமே பங்குபோடவேண்டும் என்றில்லை. மாறாக நம்மிடத்தில் உள்ளவற்றில் சிறிதளவையாவது பிறருடன் பகிர்ந்துகொள்ள நாம் முன்வரவேண்டும். கடவுள் தருகின்ற வரமெல்லாம் நம்மோடு அடங்கிப் போகவென்று தரப்படுவனவல்ல, ஆவியின் கொடைகள் அவை. நோக்கமும் தாக்கமும் கொண்டவை. அவற்றைப் புறக்கணித்தலும் கூடாது, சுயநலத்திற்காகப் பிரயோகித்தலும் ஆகாது.

# அடுத்தவர் வாழ்வும் வளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிறரோடு பிறருக்காக வாழும் நம் வாழ்வில் நமக்கான இறைவனது நன்கொடைகள் நம்மை மட்டுமல்ல அயலவரையும் அடுத்தவரையும் வாழப்பண்ணவேண்டும்.

நாம் செய்யும் நன்மைகளை - பணிகளை உபகாரமாக எடுத்துக்கொண்டு பிரதியுபகாரம் செய்யக்கூடியவர்களுக்கும், செய்கின்றவர்களுக்கும் உதவுவதை விடவும் ஏற்றுக்கொண்ட நன்மையைத் திருப்பிக்கொடுக்க முடியாதவர்களாக, உள்ளத்தின் நன்றியுணர்வை வார்த்தைகளால் மட்டுமே வெளிக்காட்டக்கூடியவர்கள், சில சமயம் அதையும் புலப்படுத்த முடியாதவர்களுக்கு உதவுவதையே இறைவன் விரும்புகின்றார். “செய்த உதவியைத் திருப்பித் தரக் கூடுமானவர்களுக்குச் செய்வதால் என்ன பயன்?” என்று இயேசுவே நம்மைக் கேட்டகவில்லையா? நன்றி என்று தம் உள்ளார்ந்த உணர்வுகளை வார்த்தைகளில் மட்டும் வடித்துக் காட்டக்கூடியதாய் வாழுகின்ற மக்களுக்கு நாம் செய்யக்கூடிய நன்மைகள் இறைவனின் காலடியில் கொட்டப்படும் நமஸ்காரப் பூக்களாக அமையும். அவற்றின் நறுமணங்கள் நமது பணியின் மேன்மையை எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

முன்னெப்போதையும் விட இன்று நம் மத்தியில் அடுத்தவர் நலன் வேண்டும் உள்ளங்கள் அதிகம் தேவைப்படுகின்றன. அடுத்தவரை மதிக்கவும் மனிதனை மனிதனாக ஏற்கவும் ஆதரித்து அரவணைக்கவும் அன்பு செய்யவும் உண்மை உள்ளங்கள் தேவை. நமக்கெதற்குப் பிரச்சினை என்று படலையினின்று அழைக்கும் குரலுக்கு மூடிய கதவுக்குள்ளால் முகத்தைக்கூடக் காட்டாது அரைகுறையாக, முகத்திலடிக்காத குறையாக வார்த்தையாலே பதிலைச் சொல்லி அனுப்பிவிடும் போக்குகள் மாறவேண்டும். பரிதவிப்போடு ஆதரவு தேடும் நிஜமான உள்ளங்களை நமக்குப் பிரச்சினை வேண்டாம் என்ற மனநிலையோடு செயற்பட்டுக் காயப்படுத்திவிட்டு நமக்கென சேதாரமில்லாத வாழ்க்கையை அமைத்துக்கொள்வதென்பது நிச்சயமாக கிறிஸ்துவுக்கொவ்வாத வாழ்க்கையாகத்தான் இருக்கமுடியும்.

ஏனென்றால் அவர்கூடக் கடைசி வேளையில் ஜெத்செமனித் தோட்டத்தில் படப்போகும் வேதனைகளின் வலிமையைத் தெளிவாக உணர்ந்துகொண்ட நிலையில் எனக்கு ஏன் இது? இது தேவைதானா? என்று சிந்திக்க முனைந்திருந்தால் சேதாரமில்லாத வாழ்க்கையைத் தேட நினைத்திருந்தால் உனக்கும் எனக்கும் ஏன் இந்த உலகத்திற்கும் கூட மீட்பு என்பதேது?

● **ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம்**

## சமூகத் தொடர்பு தினச் சிறப்பிதழ்

**தொண்டன் ஆகஸ்ட் மாத இதழ் சமூகத் தொடர்பு தினச் சிறப்பிதழாக மலரும். சிறப்பிதழைச் சிறப்பிக்க வாசகர்கள், எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.**

**கதை, கவிதை, கட்டுரை, தகவல்கள், துணுக்குகள் எந்த வடிவத்திலும் அனுப்பலாம். தகுதியானவை பிரசுரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். தபால் உறையின் இடது மூலையில் *'சமூகத் தொடர்பு தினச் சிறப்பிதழ்'* என்று குறிப்பிடப்படவேண்டும். அனுப்பவேண்டிய இறுதிநாள் *15 ஜூலை 2010.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 01

### இரட்சணிய யாத்திரிக நூலாராய்வு

**இரட்சணி யாத்தரிகத்தின் முதன் நூல்**

17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த இறையடியான் ஜான் பனியன் என்பார் திருப்பயணியின் முன்னேற்றம் என்ற நூலைப் படைத்தார். அதனைத் தமிழ் மொழியில் மோட்சப் பிரயாணம் என மொழிபெயர்ப்புச் செய்தனர். இதுவே இரட்சணிய யாத்திரிகம் எனும் கிறிஸ்தவத் தமிழ்க் காப்பியத்தின் முதன் நூலாகும்.

எனவே, அதன் முதன் நூலாசிரியரைப் பற்றி நாம் முதலில் அறிந்துகொள்வது அவசியமாகிறது. உரோம மன்னர்களின் கெடுபிடிகளில் இருந்து மீண்ட கிறித்தவ மதம் மத்திய காலத்தில் செழிப்புற்று பரவத் தொடங்கிற்று. எனினும் மதத்தைத் தங்கள் கைவசப் படுத்திக்கொண்ட சிலரால் அதன் தூய்மை கெடலாயிற்று. இதனைத் தடுத்து நிறுத்தப் பல மதப் புரட்சியாளர்கள் தோன்றினர். கல்வின் இட்ட முட்டையை மாட்டின் லூதர் அடை காத்தார். அதன் பேறாக காலஞ்

## ஆசியாவிலேயே உயரமான இயேசுவின் திருவுருவம் அருணாச்சல பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது



அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் சாங்லாங் மாவட்டத்தில் ஆசியாவின் மிகப்பெரிய இயேசுக் கிறிஸ்துவின் திருவுருவமும், அம்மாநிலத்தில் முதல் கத்தோலிக்கப் பேராலயமும் திறக்கப்பட்டுள்ளன.

இப்பிரமாண்டமான இயேசுவின் திருவுருவத்தை அருணாச்சல மாநிலத்தின் நிதியமைச்சர் செட்டோங் சேனா திறந்துவைத்தார். கொல்கொத்தாவில் செய்யப்பட்ட இந்தத் திருவுருவம் 12 மீட்டருக்கும் அதிகமான உயரத்தைக் கொண்டது. இது புதிய பேராலயத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ளது. மியாவோ பகுதியிலுள்ள குன்றின் மீது அமைக்கப்பட்டுள்ள இப்பேராலயத்திற்குச் செல்வதற்கு 172 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயத்திலிருந்து அந்நகர் முழுவதையும் பார்க்கலாம் என்றும் கூறப்படுகிறது. இரண்டு மாடிகள் கொண்ட இப்புதிய பேராலயத்தை இரான்ச்சி கர்தினால் டெலஸ் ஃபோரே டோப்போ ஆசீர்வதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சென்ற மதத் தூய்மை செய்வோர் எனும் குஞ்சுகள் பிறந்தனர். அவர்களில் ஒருவராக ஜான் பனியன் விளங்கினார்.

தனது தந்தையார் நடத்திவந்த ஒட்டு வேலையைக் கற்றிருந்த இவர், தனது மனைவி வைத்திருந்த சொர்க்கத்திற்கான சாதாரண மனிதனின் பாதை, பக்தி சாதனை என்ற இரண்டு நூல்களால் ஈர்க்கப்பட்டார். இங்கிலாந்துத் திருச்சபையைச் சார்ந்த இவர் அக்காலத்தில் தலையெடுத்த மதத் தூய்மை சபையான திருமுழுக்கர் திருச்சபையில் இணைந்து மத போதனை செய்யலானார். இவரது போதம் நாட்டுச் சட்டத்தை அவமதிப்பதாக அமைந்த படியால் 1661ல் கைது செய்யப்பட்டு வெட்போட் சிறையில் அடைக்கப்பட்டார். ஏறக்குறைய 12 வருடகால சிறைவாசம், இரண்டாம் சார்ள்சு மன்னன் ஆட்சிக்கு வந்ததும் முடிவு பெற்றது. இவரது முயற்சியால் திருத்தூய்மையாளர் இயக்கந் தோன்றியது.

சிறைவாச சிந்தனையால் திருப்பயணியின் முன்னேற்றம் என்ற நூல் உருவானது. ஆதலால் இதற்குச் சிறை நூல் என்றொரு பெயரும் உண்டு. சிறையில் அவர் பரிசுத்த வேதாகமத்தை வழுவறக் கற்றார். அதன் பேறாகவே தனது நூலைப் படைத்தார். இதில் ஒரு கிறித்தவனின் திருப்பயண முன்னேற்றத்தைக் கூறும் முதற்பாகம் 1678இலும் தனது மனைவி கிறிசித்தானியின் திருப்பயண முன்னேற்றத்தைக் கூறும் இரண்டாம் பாகம் 1684இலும் வெளிவந்தது.

ஆகவே முதற் பாகத்தைக் கிறித்தவன் திருப்பயணம் போகிறான் என்றும், இரண்டாம் பாகத்தை கிறிசுத்தியாணி உல்லாசத் திருப்பயணம் போகிறாள் என்றும் அழைப்பதுமுண்டு. இது சிறந்த இலக்கியங்களான மில்டனின் சுவர்க்க நீக்கம், சொர்க்க மீட்சி என்ற நூல்களின் சிறப்பை உடையது. பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கிய மாமேதைகளுள் மில்டனும் பனியனும் படைப்பாற்றல் மிக்கவர் என்று பெர்ணாட்சாவினால் பாராட்டப்பட்டவர்.

உலகில், இன்று அநேக மொழிகளில் வெளியிடப்படும் ஒரே நூல் பரிசுத்த வேதாகமமாகும். அதற்கு அடுத்ததாக பனியனின் இந்த நூல் 200க்கு மேற்பட்ட உலக மொழிகளில் வெளிவந்துள்ளது. 1678ல் ஒரு லட்சம் பிரதிகள் வெளியிடப்பட்ட இந்த நூல் அடுத்த 60 வருடங்களில் பரிசுத்த வேதாகமத்திற்கு அடுத்தபடி விற்பனையாகும் நூலென்ற உயர்ந்த இடத்தைப் பெற்றது.

அறுபது ஆண்டுக் காலம் வாழ்ந்த ஜான் பனியன் அறுபது நூல்களைப் படைத்தார். அவற்றுள் இலக்கிய உலகில் சிறப்புத் தேடித் தந்தவை கைவிடப்பட்ட அருள், திருப்போர், திருப்பயணியின் முன்னேற்றம், திரு வாட்மனின் வாழ்வும் மடிவும் எனும் நான்குமாகும். அவற்றுள் திருப்பயணியின் முன்னேற்றம், திருப்போர் எனும் இரண்டும் தலைசிறந்தனவாகக் கருதப்படுகின்றன. பெயருக்குக் கிறித்தவராக வாழ்ந்த அவர் தன் 30 வயதில், திருமணத்தின் பின்னரே 1654ல் திருமுழுக்குப் பெற்ற கிறித்தவரானானர். அவரது ஆன்மீக அனுபவங்களின் வெளிப்பாட்டை அருளின் பெருக்கம் என்ற அவரது படைப்பு எடுத்துக்காட்டுகிறது.

**தொடரும்...**

**கனடாவிலிருந்து.....**

**கலாநிதி ஈழத்துப் பூராடனார்**



## குறும்(புப்)பா - 39

எலிவாலும் புலிவாலாய்த் தெரியும்
இருப்புக்கு இதுவேனும் புரியும்
கலிபோலும் ககனத்தில் பறந்தாலும் கனவுகள்
கண்டாலும் அதுவாகப் புலம்பும்

- மலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வரம்

என்
மீட்பை எப்படி நான்
பிரசவிப்பது
மாடடைக் குடிலில் பெற்றெடுக்க
மரியாளுமல்ல
நான் சூசையுமல்ல

வளி வெளிக்கும்
நீரலைக்குமிடையே
தறிகெட்டலையும்
திசையறியா
காகிதத் துண்டு நான்

ஏரோதாக
அன்னாஸ், கைப்பாஸாக
பிலாத்துவாக
ஏன் யூதாஸ் கரியோத்தாகவும்
வேடங்கள் தரித்தேன்
தவறிப்போயும்
சீரேனூர் சீமோனாய்
சிந்தை கொள்ளவில்லை

நீண்டு மடியும்
ஆண்டுக் கரைதலில்
தித்திப்புகள் திகட்டுகின்றன
வாழ்வுகள் வெறுமைகளாயின
நிகழ்வுகளின் ஓரப் பொந்துகளில்
கசியும் யதார்த்தத் துளிகள்
சூன்யத்தைக் காட்டுகின்றன

ஓ.. யெகோவாத் தேவனே
என் தொடக்கமும்
முடிவும் உம்கையில் என்றால்
இடைவெளி மட்டும்
அலைமேற் குச்சியாய்
அடியேன் கரங்களில்
உணர்ந்துகொண்டேன்
ஆனால்
என் ஆயுள் குடம்
ஒழுகி
ஓய்ந்து விட்டது

என்னிதயத் துடிப்புகளில்
மரணம் தொனிக்கிறது
இரைப்பைச் சுவர்களில்
இரத்தம் கசிகிறது
சீனியுடன் போராட
சிறுநீரகங்கள் மறுக்கின்றன
எந்த வினாடியும்
இந்த இயக்கம்
ஓய்ந்து போகலாம்
என் பிதாவே என் பிதாவே
என்னைக் கை நெகிழ்ந்து விடாதீர்...

பைந்தமிழ்க்குமரன் டேவிட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# என்ன சத்தம் இந்த நேரம்!

பறவைகளின் கீச்சிடும் ஒலிகள், ஆலயமணி ஓசைகள், காற்றில் மிதந்து வரும் நாதஸ்வர ஓசைகள், மேளதாளங்கள், மனிதருடைய சத்தங்கள், இன்னிசை கானங்கள், இதை விட மாமிச இச்சையைத் தூண்டும் மனங்கவர் ஓசைகள் - ஒலிகள் இயற்கை அன்னையின் மடியில் தவழ்ந்து வருவதை நாளும் கேட்கிறோம். திருமண வைபவத்தில் தாலி கட்டும் நேரம் கொட்டும் மேளத்தை மிகவும் சத்தமாகக் கொட்டி முழங்குவார்கள். ஏன் தெரியுமா? யாராவது தும்மிவிட்டால் அல்லது ஏதாவது கெட்ட ஒலிகள் மணமகன் காதில் விழுந்து அது அபசகுணமாகிவிடாதபடி அத்தனை சத்தங்களையும் மேளத்தின் சத்தம் மேற்கொண்டுவிடும். அதாவது ஒரு சத்தத்தை இன்னொரு சத்தம் மேற்கொண்டுவிடும்.

குற்றமற்றவனின் சத்தத்தை குற்றம் புரிந்தவனின் சத்தமும், நீதியின் சத்தத்தை அநீதியின் சத்தமும் மேற்கொண்டு விடுவதைக் கண்முன்னே காணமுடிகிறது. முட்புதர் அருகே மோசே கேட்ட சத்தமும் மோரியா மலையில் ஈசாக்கைப் பலியிடும்போது கேட்டதும், இயேசு திருமுழுக்குப் பெற்றபோதும் மறுரூபமானபோதும் கேட்டவையெல்லாம் இறைவனின் சத்தங்களே. சத்தங்களைக் கேட்பதில் கூட நாம் நமது உரிமைகளைப் பயன்படுத்தவேண்டும். ஆயிரக்கணக்கான சத்தங்களின் மத்தியிலும் நாம் நமது செவிகளைத் திறந்து கடவுள் எம்மோடு பேசும் சத்தத்தை இனங்கண்டு உணர ஆயத்தமா? சில நேரங்களில் கடவுள் பேசினாலும் நம் செவிகளில் கேட்க முடியாதபடி உலகக் கவலைகள், பாரங்கள், பொறுப்புகள் அனைத்தும் நம் உள்ளங்களை நெருக்கிவிடுகின்றன. அதிகாலையில் அவர் நம்மோடு பேச விரும்பினாலும் நித்திரை மயக்கம் அதைக் கேட்கமுடியாதபடி மேற்கொண்டுவிடுகிறது.

இன்று கடவுள் நம்மோடு பேசவும், வழிநடத்தவும் விரும்புகிறார். "இன்று நீங்கள் அவர் குரலுக்குச் செவி கொடுத்தால் எத்துணை நலம்?" (தி.பா 95:7) எப்பொழுதும் கடவுளுடைய சத்தத்தைக் கேட்க நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். பகலின் குளிர்ச்சியான வேளை அதிகாலை மூன்று மணி தொடக்கம் நான்கு மணி வரை என்று கூறப்படுகிறது. "அதிகாலை என்னைத் தேடுபவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி 8:17)



எனவே அதிகாலை வேளையில் எழுந்து உலக சத்தங்களைக் கேட்க முன்னர் ஆண்டவரின் சத்தத்தைக் கேட்க ஆயத்தமாகுங்கள். அவரைத் துதியுங்கள், போற்றுங்கள், ஆராதியுங்கள். கர்த்தருடைய சத்தம் உங்கள் ஆன்மாவை மகிழ்ச்சியூட்டும். நீதிமான்கள் கூட ஆண்டவரிடம் யாசித்ததும் இந்நேரங்களில்தான். ஆபிரகாம், யாக்கோபு, மோசே, யோசுவா, யோபு, தாவீது என்பவர்கள்கூட அதிகாலையில் தேவனைத் தேடினார்கள் என்று வேதாகமம் சான்று பகர்கின்றது. "உங்கள் கண்களோ பேறு பெற்றவை ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் பேறு பெற்றவை ஏனெனில் அவை கேட்கின்றன" (மத் 13:16). காதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேட்கத்தான் உருவாக்கப்பட்டன. அது மிகவும் அமைதியான அவயவம் என்றாலும் அது கேட்பவற்றைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அன்று ஆண்டவர் பேசிய வார்த்தைகளை ஆயிரக்கணக்கான சனங்களின் காதுகள் கேட்டன. அவை மிகவும் பாக்கியமான காதுகள். கிறீஸ்துவின் வல்லமையுள்ள வார்த்தைகளைக் கேட்ட காதுகள் அற்புதங்களுக்குச் சாட்சி பகர்ந்தன. காற்றையும் கடலையும் அதட்டியபோது கூட அவைகள் அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தன.

இந்த நவீன காலம் பேசுகிற காலம். எல்லோருடைய கைகளும் காதுகளுக்கருகில், வாய் எதையெதையோ முணுமுணுத்துக் கொண்டிருக்கும். இப்படி அனேகக் கண்டுபிடிப்புகள் மனிதனை ஓர் கைப்பிடியினுள் அமுக்கி வைத்திருக்கின்றன. சராசரி ஓர் ஆண் ஒரு நாளில் இருபத்தியொன்பதாயிரம் (29,000) வார்த்தைகளும் ஒரு பெண் முப்பத்தையாயிரம் (35,000) வார்த்தைகளும் பேசுவார்கள் என்பது ஆய்வாளரின் கருத்து. இவ்வார்த்தைகள் எப்படிப்பட்டவை? நல்ல வார்த்தைகளானால் அவற்றைக் கேட்கும் காதுகளும் பாக்கியம் பெற்றவையே. மங்கலமான, அமங்கலமான வார்த்தைகள் பற்றியும் நாம் அறிந்திருக்கிறோம்.

நம் வார்த்தைகள் கூட உடைந்த உள்ளங்களை தேற்றும் வார்த்தைகளாக இருக்கட்டும். (நீதி 10:11, நீதி 15:23).

"சோறு விழுந்தால் எடுத்துவிடலாம், சொற்கள் வழுந்தால் எடுக்கவே முடியாது" என்பது பழமொழி. பேசிய வார்த்தைக்கு நீங்கள் எஜமான். ஆனால் பேசிவிட்டாலோ உங்களுக்கு அந்த வார்த்தைகள் எஜமான் என ஆங்கிலேய மக்கள் கூறிக்கொள்வார்கள். "கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" (மத் 11:15).




● றெ.சிதம்பரி



## பொருளாதாரத் துறையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் பிறரன்பை அடித்தளமாகக் கொண்டிருக்கவேண்டும் - திருத்தந்தை

பொருளாதாரத் துறையில் எடுக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களும் கொள்கைகளும் உண்மையில் பிறரன்பை அடித்தளமாகக் கொண்டதாக அமையவேண்டும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். பொருளாதார வாழ்வுக்கான ஒருங்கிணைந்த நன்னெறி அணுகுமுறையானது பொதுநலனை மேம்படுத்துவதாய் அமையவேண்டும். இது, மனித மாண்பை மதிப்பதில் அடித்தளத்தைக் கொண்டிருக்கவேண்டும். மற்றும் உற்பத்தி, வணிக அமைப்புகள், அரசியல் நிறுவனங்கள் சமூக நலனே தலையாய இலக்கு என்பதை ஏற்பதாகவும் இருக்கவேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனதை மாற்ற முடியாது





"இலங்கை ஜனாதிபதி ஒரு சிங்களத் தீவிரவாதி. அவரின் மனதை மாற்ற முடியாது" என்று சிங்கப்பூரின் முதல் பிரதமரும் நவீன சிங்கப்பூரின் சிற்பியும், தற்போதையப் பிரதமரின் தந்தையுமான லீ குவான் யூ கூறியுள்ளார். லீ குவான் யூவுடனான உரையாடல்கள் (சிட்டிஸன் சிங்கப்பூர்: ஹௌ ரூ பில்ட் ஏ நேஷன்) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள நூலில்தான் இவ்வாறு கூறியுள்ளார் லீ.

அவர் அந்நூலில் "இலங்கையில் சிங்களவர்கள் எப்போதுமுதல் இருக்கிறார்களோ அப்போதிருந்தே தமிழர்களும் இருக்கின்றனர்.

இலங்கை மகிழ்ச்சியான, ஐக்கியப்பட்ட நாடாக இல்லை. இலங்கையில் தமிழர்களுக்காகப் போராடி வந்த விடுதலைப் புலிகள் வீழ்த்தப்பட்டுவிட்டனர். இதன்மூலம் இலங்கை இனச் சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது என்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கூறிவருகிறார். இதை மற்றவர்களும் நம்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஆனால், தமிழர்கள் அடங்கிக் கிடக்க மாட்டார்கள். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் பேச்சுகளை நான் படித்திருக்கிறேன். அவர் ஒரு சிங்களத் தீவிரவாதி. இதை நான் நன்றாக அறிவேன். அவரது மனதை மாற்ற முடியாது" என்று கூறியுள்ளார் லீ குவான் யூ.

நூலாசிரியர் கேட்ட கேள்விகளுக்கு லீ அளித்துள்ள பதில்களில்,

"இலங்கை இன்று மகிழ்ச்சியுடன் இல்லை. பெரும்பான்மையான சிங்களவர்கள், விடுதலைப் புலிகளை இம்முறை தோற்கடித்துவிட்டனர், உண்மைதான். ஆனால், சிறுபான்மையினரான தமிழர்களை சிங்களவர்கள் ஒடுக்க முயலுகிறார்கள். இதனால்தான் ஆயுதப் போராட்டம் வெடித்தது. ஆனால் ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் அழித்துவிட முடியும் என்ற அவர்களின் எண்ணம் நிச்சயம் ஈடேறாது என்று நான் கருதுகிறேன்.

இலங்கையில் நடந்தது ஓர் இன அழிப்புதான். தமிழர்கள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவார்களா என்பதை என்னால் சொல்ல முடியாது. ஆனால், நிச்சயம் தமிழர்கள் நீண்டகாலம் பொறுமையோடு காத்திருக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். அதற்கேற்பத்தான் அரசாங்கம் இப்போது நடந்துகொண்டிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை சிங்களவர்களைவிட தமிழர்களுக்குத்தான் அதிக மரியாதை தரப்படவேண்டும். அதற்கு முற்றிலும் தகுதியானவர்கள் தமிழர்கள்தான். மலேசியா, சிங்கப்பூரில் போய்ப் பார்த்தால் மலாய் இனத்தவரை விட சீனர்களும், தமிழர்கள் உள்ளிட்டோருந்தான் கடுமையாக உழைக்கிறார்கள்.

அதேபோல இஸ்ரேலியர்களும், ஜப்பானியர்களும் மிகக் கடுமையான உழைப்பாளிகள். எதிர்கால உலகம் சீனர்கள் மற்றும் ஆசியர்களிடந்தான் இருக்கப்போகிறது" என்று கூறியுள்ளார் லீ.

இந்த நூலை முன்னணிப் பத்திரிகையாளரும் லொஸ் ஏஞ்சல்சைச் சேர்ந்தவருமான பேராசிரியர் டாம் பிளேட், லீயிடம் பேட்டி கண்டு எழுதியுள்ளார்.

**• நன்றி: வீரகேசரி 06.06.2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யேசுவின் சீடர் தோமஸ் இயேசுவின் 'நானே வாழ்வும் வழியும் உண்மையும்' என்ற வாழ்த்தொலியினால் ஆட்கொள்ளப்பட்டு மேலும் தம் ஞானத்தை உள்ளொளியாக்க அலெக்சான்றியாவில் நூற்பனுவல்களிலும் தியானத்திலும் ஈடுபட்டு, கிரேக்க மொழியிலும் பாண்டித்தியம் பெற்று சுமார் 37 கிரேக்க அரசர்கள் ஆட்சி புரிந்து விவிலியப் போதனைகளுக்கு கால்கோலிட்ட சேரநாட்டினூடாக சோழ நாட்டிற்கும் மயிலாப்பூருக்கும் வருகைதந்ததிற்கு அவருக்கு சூழ்நிலைகள் இடந்தந்திருக்கவேண்டும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் கிறீஸ்தவர்களின் இந்திய வருகையைப் பற்றிக் குறிப்பிடும்போது கிறீஸ்தவர்கள் கிறீஸ்து சகாப்தத்தின் முதல் நூற்றாண்டிலேயே வருகை தந்ததாகக் கூறுகிறார்.



புனித தோமையார் எப்போது தமிழ்நாடு வந்தார் என்பதற்குத் திட்டவட்டமான வரலாற்றுத் தகவல்கள் இல்லாது போயினும், தம் உயிரையே மயிலாப்பூரில் உவந்தளித்த வள்ளல் வேறு பல சீடர்களை எவ்வாறாவது ஆட்கொண்டிருக்கவேண்டும்.

திருவள்ளுவர் மயிலாப்பூரைச் சேர்ந்தவர். அவரது காலம் சரியாக வரையறை செய்யப்படவில்லை. ஆனால் கிறீஸ்துவின் ஆன்மீகக் கருத்துகள் திருக்குறளில் நிறைந்து காணப்படுகின்றன. திருவள்ளுவரின் குறட்பாக்களுக்கு உரைகண்ட உரையாசிரியர்களாகிய ஞானிகள் பெரும்பாலும் தங்காலச் சொற்களுக்கான கருத்துகளையும் தற்காலத் தத்துவ ஞானங்களையும் சமயச் சார்பையும் குறளுக்குப் புகுத்தி பிற்காலச் சந்ததியை திசைமாறச் செய்துள்ளார்கள்.

# ஆசியாவில் புனித தோமையார்

இதை நாம் ஏற்பதில் எவ்வித கஷ்டமும் இல்லை. இலக்கிய, சமய நூலாய்வாளர்களும் இத்துறை விமர்சகர்களும் நூல்கள், சொற்களுக்கான கருத்துகள் சிதைவுபடுவதையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

இத்துறை ஆய்வு மிக விரிவானது. இங்கு நாம் முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டியது, ஆய்வாளன் எவ்வித முன்பிறழ்வு ணர்ச்சியில்லாது ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்பது. வள்ளுவரே கூறினார் 'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு'

• நன்றி : கர்மயோகி பவுல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உன்னையே நீ அறிவாய்

இது என்ன புது சொற்றொடர்? என்னை எனக்குத் தெரியாதா என அனேகம் பேர் கேள்விக்கணை தொடுக்கலாம். பல அறிஞர்கள் மேதைகள் தம்மைத் தாம் அறிந்து வாழ்வைப் பெற்றிருக்கலாம். "உன்னையே நீ அறிவாய்" என்ற வாக்கு அக்காலத்தில் இறைவனால் கொடுக்கபட்ட அசரீரி வாக்கு என மேன்மையாக மதிக்கப்பட்டு, 'டெல்பாஸ்' என்ற இடத்திலுள்ள கோவிலில் இச்சொற்றொடர் கிரேக்கர்களால் பொன் எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்ததாம். கிரேக்கர்கள் இதனைத் தமது மூன்று மதக் கட்டளைகளில் ஒன்றாக மதித்துப் பேணி வந்தார்களாம். ஆனால், இன்று தன்னைப் பற்றி தனக்கு சாகும்வரை தெரியாது. ஆனால் பிறரைப் பற்றியும் பிற விடயங்கள் பற்றியும் நன்றாகத் தெரியும்

சோக்கிரடீஸ் சிறந்த, புரட்சிகரமான சிந்தனையாளர். அவர் சாகுமுன் கூறினார் "உன்னையே நீ அறிவாய், அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பதற்காகவல்ல, நீ என்ன செய்கிறாய் என்று சிந்தித்துச் செய்" உலக மேதைகள் பலரது ஏகோபித்த கருத்து என்னவெனில் "உலகில் மிக மிகக் கடினமானது தன்னைத் தான் அறிவதுதான்" ஸ்பானிய மகாகவி ஸெர்வாண்டிஸ் கூடக் கூறினார் "உன்னை அறிவதையே முதலில் உனது தொழிலாக வைத்துக்கொள்" இன்றைய கணினி யுகம் எத்தனையோ பாடங்களைக் கற்பிக்கிறது. மனிதனும் அறிவியலை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்கிறான். ஆனால் ஏனோ தான் யாரென தன்னைத் தானே அறியாது தன்னிடமே தான் அடிக்கடி ஏமாந்து புலம்புகிறான். சரியாக ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் வாழ்வில் தான் அடைந்த ஏமாற்றங்களுக்கும், துயரங்களுக்கும் தானே மூலகாரணமாக இருப்பான். சிலர், தான் யார் என்றவுடன் பெயர், வயது, முகவரி ஏனைய திறமைகளை மட்டுமே கூறுவார்கள். சரியாகத் தான் யார் என்று இனங்கண்டது கிடையாது. தன்னைத் தான் ஏற்றுக்கொண்டதும் கிடையாது; தன்னைத் தான் திருத்தியதும் கிடையாது. "அறிவாளர்களும் சரி அறவாளர்களும் சரி தங்களையே தாங்கள் அறிவதற்குப் பெரிதும் முயல்கிறார்கள், தியானம் செய்கிறார்கள்" என்று ஷேக்ஸ்பியர் கூறினார். ஒரு மாமேதை கூறினாராம் "ஓ இறைவா! என் எதிரிகளிடமிருந்து என்னை நான் காத்துக்கொள்வேன். நான் எச்சரிக்கையாகவும் நடந்துகொள்வேன். இறைவா என்னை என்னிடமிருந்து காப்பாற்று"

ஏன் அவர் அவ்வாறு கூறினார் தெரியுமா? அவசரத்தில், தற்பெருமையில், வறட்டுக் கௌரவத்தில், நான் என்ற மமதையில் பிழையான தீர்மானங்களை எடுப்பதும் நான்தான். என்னை நானே பிழையாக வழிநடத்தி, எனக்கே எல்லாம் தெரியும் எனக் கூறி நானே என்னைப் படுகுழியில் தள்ளிவிடுகிறேன். ஒரு தீர்மானத்தை எடுக்குமுன் பல தடவைகள் யோசிப்பதில்லை. எனது தவறுகளை நானே இனங்காண்பதில்லை. என்னை நான் திருத்த முயற்சிப்பதில்லை. நான் என்ன செய்கிறேன்? நான் எங்கே போகிறேன்? எனக்கே சரியாக, திட்டவட்டமாகத் தெரியாது. எனது



- V.S -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உணர்ச்சிகளின், எண்ணங்களின், பார்வைகளின் கைப்பொம்மைதானா நான்?

"அப்படியானால் தன்னைத் தான் அறிதல் என்றால் என்ன?" ஓ! என்னை எனக்குத் தெரியாதா? புதுசாக என்னைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கு? என்று நீ வறட்டுத்தனமாகப் பேசினால் உன்னையே நீ இறுதிவரை அறியமுடியாது. உன்னை உன்னிடமிருந்து காப்பாற்ற ஒரு வழி உண்டு. உன்னிடமிருந்து நீ சற்று விலகி நின்று உன்னை நீயே அடிக்கடி கவனி. உன்னை நீ "அவன்" என்று கருதிக்கொண்டு அவதானி. உனது நல்லது, கெட்டதுகளையெல்லாம் நீ அவனாகிய உன்னில் இனங்காண்பாய். ஒரு பேப்பரை எடு. உன்னிடம் நீ கண்ட நல்ல குணங்களை வரிசையாக எழுது, உன்னிடம் நீ கண்ட தீய குணங்களையும் வரிசையாக எழுது. உன்னை நீயே பிழையாக வழிநடத்தியதால் ஏற்பட்ட விபரீத விளைவுகளை வரிசைப்படுத்தி எழுது. நீ உன்னைப் பிழையாக வழிநடத்துவதை இனங்காண்பாய். இதன் பின்பு பழைய அனுபவங்களைப் பாடமாக எடுத்துக்கொண்டு திட்டமிட்டு உன்னையே நீ வழிநடத்து. உன்னை நீ இனங்காணும் போது உன்னையே நீ உனது மாபெரும் எதிரியைக் கவனிப்பது போன்று கவனித்துக்கொள். உன்னை நீ வழிநடத்தும்போது உண்மையுள்ள நண்பனாக மாறிவிடு. அப்போதுதான் "நீ" உன்து வீண்பெருமை, வறட்டு கௌரவம், தான்தோன்றித் தனங்களிலிருந்து காப்பாற்றப்பட்டு, மேலான வாழ்வு பெறுவாய். தனியாக இருந்து உன்னை நீயே எடை போட்டுக்கொள். நித்திரைக்கு முன் அன்றை நிகழ்வுகளை மதிப்பீடு செய்துகொள். உரோமானிய அறிஞன் செனேகா இதைப்பற்றி விளக்குங்கால், "ஒவ்வோர் இரவும் நம்மைப் பற்றிக் கேள்விக் கணக்குப் போட்டு, இன்று நான் எந்தத் தீய உணர்ச்சியை அடக்கி ஆண்டு என்னை நான் வெற்றி கொண்டேன்? எந்த நற்பண்பால் என்னை அலங்கரித்தேன் என்று எடை போட்டுக்கொள்". தன்னை வென்றவனே உலகை வென்றவன். தன்னை ஆளத் தெரியாதவனுக்கு பிறரையும் ஆளத் தெரியாது. சகிப்புத்தன்மை, பொறுமை, ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் போன்றவை வளர நிம்மதி ரோதன்றும். "உன்னையே நீ அறிவாய்"



## தம்பதியருக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்திற்கும் மீட்பின் கருவியாகத் திருமணம் உள்ளது - திருத்தந்தை

கடவுள் நமக்குக் கொடையாக வழங்கியுள்ள திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு, தந்தை, மகன், தூயஆவி ஆகிய மூவொரு கடவுளின் கரையற்ற அன்பை அனுபவிக்க உதவுகின்றன. கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டுள்ள மனிதர்கள் இந்த அன்பிற்கு உரியவர்கள். இதேபோல் அன்புகூரப்படவும் வேண்டியவர்கள். கடவுளின் அன்பு மட்டுமே நமது உள்ளார்ந்த தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

எனினும், கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான அன்பு வழியாக, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயான அன்பு வழியாக, நாம் ஒருவர் மற்றவர் மீது காட்டும் அன்பின் மூலம் வரவிருக்கும் வாழ்வில் நாம் சுவைக்கவிருக்கும் எல்லையற்ற அன்பு வழங்கப்படுகிறது. திருமணம், திருமணத் தம்பதியருக்கு மட்டுமல்லாமல், முழுச் சமுதாயத்திற்கும் மீட்பின் கருவியாக உள்ளது. எனினும் இது பிறரின் நலனுக்காக நமது சுய இன்பங்களைத் தியாகம் செய்யவும் நமக்குச் சவால் விடுகிறது. அது அவ்வாறு வாழ நம்மை வலியுறுத்துகிறது. திரும்ணத்திற்கு சகிப்புத் தன்மையும் மன்னிப்பும் தேவைப்படுகிறது. புதிய வாழ்வைப் பேணிப் பாதுகாக்க இது நம்மை அழைக்கிறது. நல்ல குடும்பச் சூழலில் வாழும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் நல்ல பண்புகளோடும் வாழ்வதற்கான முதலும் அடிப்படையுமான பள்ளியைக் கண்டுணர்ந்துள்ளார்கள். திருமணமும் குடும்ப வாழ்வும் மனித சமுதாயத்துக்கு வழங்கும் அளப்பரிய நன்மைகளைச் சரியான விதத்தில் புரிந்துகொண்டு அவற்றை வளர்ப்பதற்கு இந்த மாநாட்டில் பங்குகொள்ளும் எல்லாரும் முயற்சிக்குமாறு அவர்களைத் தான் ஊக்குவிப்பதாகவும் திருத்தந்தை கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருக்கள் ஆண்டு

## பேரருள்தந்தை பொன்னையா யோசப் அவர்களுடன் ஒரு நேர்காணல்...

**கடந்த இதழ்த் தொடர்ச்சி...**



**இன்றைய வாழ்க்கை முறையிலே, இன்று உங்களுக்குத் தெரியும் நுகர்வுக் கலாசார, சந்தைப் பொருளாதார வாழ்க்கைமுறை. எல்லாம் போட்டிமயமானது. எல்லாம் நுகர்வை வலியுறுத்துகின்ற, பரப்புகின்றதொரு வாழ்க்கை முறை. இத்தகைய வாழ்க்கை முறையிலே எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினைகளிலே குருக்களுடைய கடமை என்ன? அக்கடமையைச் செய்வதென்பது நடைமுறையிலே எந்தளவுக்குச் சாத்தியமாக இருக்கிறது? இன்றைய வாழ்க்கை முறைக்கு இப்போதுள்ள பொருளாதார, அரசியல் சிந்தனை முறைகளிலே குருக்களுடைய கடமைகளைக் குருக்கள் செய்வதற்கு எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாய் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?**

ஆம், நீங்கள் கேட்டது காலத்திற்கு ஏற்றதொரு வினா. உண்மையிலேயே குருக்கள் என்பவர்கள் உலகத்திலிருந்து தெரிவுசெய்யப்படுகின்றபோது மனித சமுதாயத்திலே என்னென்ன குறைபாடுகளும் நிறைவுகளும் இருக்கின்றதோ அவற்றோடுதான் அவர்களும் வருகின்றார்கள். குருத்துவப் பயிற்சி என்ற காலகட்டத்திலே அவர்கள் பயிற்சி பெறுகின்றார்கள். விசேடமாக ஆன்மீகத்திலே அவர்கள் நெறிப்படுத்தப்படுகின்றார்கள். அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எவ்வளவு தூரம் அவர்கள் உள்வாங்கிக் கொள்கின்றார்கள், எவ்வளவு தூரம் அவர்கள் மனமாற்றப்படுகின்றார்கள் என்பது அவர்களைப் பொறுத்துத்தான் தெரியவேண்டும். ஆகவே, குருக்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பிறகு எவ்வளவு தூரம் தங்கள் அழைத்தலுக்கு ஏற்ற வாழ்க்கை வாழுகின்றார்கள், அது நடைமுறைச் சாத்தியமா, சாத்தியம் இல்லையா என்பது உண்மையிலேயே ஒரு பிரச்சினையான விடயம். ஆனால், வாழவேண்டும். அதற்காகத்தான் அவர்கள் தங்களை அர்ப்பணிக்கின்றார்கள். குருக்களின் வாழ்வானது மகிழ்ச்சியும் மனநிறைவும் கிறிஸ்துவின் மனநிலையில் வாழும் நிலைப்பாடும் கொண்டிருக்கவேண்டும். உண்மையிலேயே குருக்களாக வர விரும்புகின்றவர்கள் தங்களைத் தியாகம் செய்து, தங்களை அர்ப்பணிக்கின்றவர்கள். அந்த அர்ப்பணத்திலே அவர்களுக்கு மகிழ்ச்சி வேண்டும்; மனநிறைவு வேண்டும். மூன்றாவதாக கிறிஸ்துவின் மனநிலையில் வாழும் ஒரு நிலைவேண்டும்.

கிறிஸ்துவின் மனநிலை எவ்வளவு தூரம் அவர்களுக்கு இருக்கின்றது என்பதை மக்கள்தான் சொல்லவேண்டும். ஆகவே, மக்களுக்கு அதை உணர்த்தக்கூடிய சக்தி இருக்கின்றது. இவர் உண்மையான நல்ல குருவா? இவர் குருத்துவத்தின்படி வாழுகின்றாரா? இவர் குருத்துவத்திலிருந்து பிரிந்து செல்கின்றாரா என்பதை மக்கள் வெகு இலகுவில் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அதனால்தான் இன்றைய உலகிலே குருக்கள் மட்டில் மக்களுக்கு ஒரு தவறான அபிப்பிராயம் வருகின்றது. அது ஏனென்றால் குருக்கள் உலகத்தில் வாழுகின்ற போது அந்த உலகத்திலே சிக்கிக்கொள்கின்றார்கள். இவை மேற்கத்திய நாடுகளிலே அதிகமாக நடைபெற்றது. இந்தக் குருத்துவத்தைப் பற்றியதொரு இழிவான நிலை வந்த காரணம் இதுதான். ஏனென்றால், அவர்கள் அந்த உலகத்தோடு வந்து உலகத்தினுடைய நிலைப்பாடுகளை தங்கள் உள்ளத்திலே ஆன்மீகத்திலே கொண்டிருக்கிறார்கள். ஆகவே, என்னைப் பொறுத்தளவில் ஓர் உண்மையான ஆன்மீகம் இல்லாவிட்டால் உண்மையான குருவாக இருக்கமுடியாது. ஆன்மீகந்தான் அடிப்படை. அதுவும் கிறிஸ்துவினுடைய மனநிலை ஒரு குருவிடம் விளங்கவேண்டும்.

**குருத்துவ வாழ்வு பற்றி மிகவும் யதார்த்தமான கருத்துகளை இங்கு சொன்னீர்கள் ஆயரவர்களே. எங்களுடைய சபையிலே - அதாவது கத்தோலிக்கச் சபையிலே குருக்கள் இருப்பது போல் ஏனைய சபைகளிலும் ஏனைய மதங்களிலும் குருக்கள் இருக்கிறார்கள். குருத்துவப் பணி அந்தந்த மதங்களுக்கும் சபைகளுக்கும் ஏற்றளவிலே அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த வகையிலே இந்தக் கத்தோலிக்கக் குருத்துவத்திற்கு அவற்றிலிருந்து வேறுபட்ட தனித்தன்மை இருக்கிறதா? அப்படியானால் அந்தத் தனித்தன்மை என்ன என்பது பற்றிச் சொல்லுங்கள்?**

கத்தோலிக்கக் குருத்துவமும் கத்தோலிக்கர் அல்லாத அவர்களுடைய குருத்துவத்துக்கும் வேறுபாடுகள் இருக்கின்றது. ஏனென்றால், கத்தோலிக்கக் குருக்கள் பாரம்பரியமாக, வழிவழியாக வந்தவர்கள். கிறிஸ்துவில் தொடங்கி அப்போஸ்தலர்கள் வழியாக, ஆயர்கள் வழியாக அப்படியே வந்துகொண்டிருக்கிற ஒரு தொடர்ச்சி இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். அந்தக் கிறிஸ்து அளித்த அதிகாரம் தொடர்ந்து இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது, திருநிலைப்படுத்தல் சடங்கின் மூலம். அந்த நிலை மற்ற ஏனைய கிறிஸ்தவ சபைகளிடையே இல்லை. அவர்கள் இடையிலே பிரிந்து சென்றபடியால் அந்தத் தொடர்ச்சி அறுபட்டுவிட்டது.

ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமானவர்களைத் தெரிவுசெய்கிறார்கள், விருப்பமானவர்களைத் திருநிலைப்படுத்துகிறார்கள். ஒரு வழிமுறை இல்லை, பாரம்பரியம் இல்லை, இதனை நாங்கள் பார்க்கலாம். மற்றது, ஏனைய மதங்களிலும் குருக்கள் இருக்கிறார்கள், துறவிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் பணியும் எங்களது கத்தோலிக்கக் குருக்களின் பணியும் சற்று வித்தியாசமானது. இவ்வாறு சொல்லுகின்றபோது கிறிஸ்துவினுடைய பணி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேய்ப்பனின் பணி. திருச்சபையின் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் மூன்று பணிகளை அழகாகச் சொல்கின்றார்கள். போதிக்கும் பணி, தூய்மையாக்கும் பணி, தலைமை வகிக்கும் பணி. கிறிஸ்துவினுடைய இந்த மூன்று பணிகளையும் கத்தோலிக்கக் குருக்கள் செய்து வருகின்றார்கள், செய்யவேண்டும். அதிலே முக்கியமானது, இறைவனுக்கும் மக்களுக்கும் இடைநிலையாளராக இருந்து இறைவனின் ஆசீரை மக்களுக்கு வழங்குகின்றவராகவும் மக்களின் குறைகளை இறைவனுக்கு எடுத்துச் சொல்லுகின்றவராகவும் விளங்கவேண்டும். அதுதான் பலி நிறைவேற்றும் பணி. அதற்காக அவர் தன்னையே தியாகம் செய்யவேண்டும். உதாரணமாக எபிரேயருக்கு எழுதிய மடலிலே அதன் ஆசிரியர் அழகாகச் சொல்லுகிறார். அதாவது "எனக்கோர் உடலை நீயே தந்தாய் அதை உனக்கே அர்ப்பணிக்கின்றேன்" என்று. இயேசு ஒரு குருவாக இருந்து சொல்லுவதை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அதனை வாசித்துக் காட்டுவது நலம்.

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால், ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எனவே நான் கூறியது என் கடவுளே உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன்" இதுதான் உண்மையான பலி. தன்னேயே தியாகம் செய்வது. இயேசு தன்னுடைய தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார். அதாவது சிலுவைச் சாவை ஏற்றார். அதுதான் உண்மையான பலி, உண்மையான தியாகம். கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற குருக்களும் தங்களையே தியாகஞ் செய்து தங்களது வாழ்வையே மக்களுக்காக அர்ப்பணிக்கவேண்டும். ஆகவே, மக்கள் துன்பப்படுகின்றபோது இவர்கள் மக்களின் துயர் துடைக்கின்றவர்களாக, நலிந்தோரைத் திடப்படுத்துகின்றவர்களாக, நோயுற்றோரைத் தேடிச் செல்பவர்களாக, ஒதுக்கப்பட்டோரை அணைக்கின்றவர்களாக, நீதிக்காகப் போராடுபவர்களோடு நின்று குரல் கொடுக்கின்றவர்களாக மாறவேண்டும். அதற்காகத் தன்னுடைய உயிர் போனாலும் பரவாயில்லை என்று முன்வருகின்றவர்கள்தான் உண்மையான குருக்கள். இன்றைய உலகிலே இதைத்தான் நான் குருக்களின் சவாலாகக் கருதுகின்றேன்.

**மிக அழகான கருத்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். மற்ற மதங்களிலே, சபைகளிலே இருக்கின்ற குருத்துவத்திலிருந்து கத்தோலிக்கக் குருத்துவம் எந்தளவு வேறுபட்டிருக்கிறது, அதனுடைய பாரம்பரியத் தொடர்ச்சி, அதனுடைய பணிச் சிறப்பு பற்றியெல்லாம் மிகநன்றாகக் கூறியிருக்கிறீர்கள். ஆயரவர்களே, இதுவரை குருக்களைப் பற்றிப் பார்த்தோம். இன்று அதன் அடுத்த மறுபதிப்பாக குருக்கள் மட்டிலே இறைமக்களுக்கு இருக்கவேண்டிய கடமைகள் என்ன? அவர்களுடைய பதிலீடுகள் என்ன? குருக்களுடைய பணிக்கும் குருக்களைப் பற்றிய திருச்சபையினுடைய போதனைக்கும் இறைமக்களுடைய பதிலீடு, அவர்களுடைய கடமை எதுவாக இருக்கவேண்டும் என்று சொல்லுங்கள்?**

அதாவது முதலாவது அவர்கள் உணரவேண்டும், குருக்கள் தங்கள் மத்தியிலிருந்து உருவாகின்றவர்கள், தங்களுக்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு இறைவனால் அனுப்பப்படுகின்றார்கள். குருக்களின் விளைநிலம் குடும்பங்கள். ஆகவே, குடும்பங்களிலே குருக்களைப் பற்றிய நன்மதிப்பு இருக்கவேண்டும். தங்கள் பிள்ளைகளுக்கு இவற்றைச் சொல்லவேண்டும். குருக்கள் பிழை விடுகிறார்கள், தவறு செய்கிறார்கள் என்பதை நாங்கள் பெரிதுபடுத்தாமல் குருக்கள் எங்களுக்காக வாழுகின்றவர்கள், எங்களுக்காகத் தங்களைத் தியாகம் செய்கின்றவர்கள், அவர்களைப் பற்றி நாங்கள் பெருமைப்படவேண்டும்.

அவர்களைப் பற்றி நாம் பெருமையாகக் கூறும்போதுதான் எங்கள் குடும்பங்களிலிருந்தும் எதிர்காலத்திலே பல குருக்கள் உருவாகக்கூடிய வாய்ப்பு அதிகரிக்கின்றது. ஒரு பாப்பரசர் என்றாலும் அவரும் ஒரு சாதரணமான நல்ல குடும்பத்திலே பிறந்தவராக இருக்கின்றார். ஆகவே, குடும்பந்தான் முதல் அடிப்படை விளைநிலம். தேவ அழைத்தலின் விளைநிலம் குடும்பம். ஆகவே, குடும்பங்களிலே அம்மதிப்பீடு வரவேண்டும். அடுத்து பங்கிலே, பங்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தளத்திலே எவ்வளவோ பிரச்சினைகள் உருவாகின்றன. குருக்களுக்கும் ஒருசில மக்களுக்கும் ஒத்துப்போவது சரியான பிரச்சினை. சிலபேர் கோயிலுக்கு வராமலே இருக்கின்றார்கள். இந்தக் குரு வைக்கின்ற திருப் பலியிலே கலந்துகொள்ளாமல் வேறு கோயிலுக்குப் போகின்ற வர்களும் இருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நாங்கள் மறந்து ஒப்புரவு செய்ய வேண்டும். குருக்களும் பிழை விடுகின்றார்கள். அவர்களைத் திருத்த வேண்டும். அவர்களுக்காக மன்றாட வேண்டும். அவர்களைப் பற்றி நல்ல செய்திகளை நாங்கள் சொல்லவேண்டும். அவ்வாறு செய்யும்போதுதான் எதிர் காலத்தில் எங்கள் மத்தியில் பல குருக்கள் உருவாக வாய்ப்புண்டு. இல்லை யென்றால் எதிர்காலத்தில் நாங்கள் குருக்களை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் எங்களுக்காக இறைவனால் அனுப்பப்பட்ட கொடை. இதை நாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

**நல்லது ஆயரவர்களே! குருத்துவ ஆண்டு பற்றி, குருத்துவம் பற்றி, குருத்துவ வாழ்வு பற்றியெல்லாம் திருவிவிலிய வழி நின்றும், திருச்சபையின் வரலாற்றுப் பின்னணியிலும், எதிர்காலக் குருத்துவ வாழ்வுக்கு வழி காட்டும் வகையிலும் பயனுள்ள கருத்துகளைப் பகிர்ந்து கொண்டீர்கள்.**

**எமது அழைப்பை ஏற்று தாங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு தொண்டன் வாசகர்கள் (நேயர்கள்) சார்பில் எமது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**நேர்கண்டவர்: மலர்வேந்தன்**

# மனிதாபிமான நடவடிக்கைகள்

வடக்கில் இராணுவம் மேற்கொண்ட
மனிதாபிமான நடவடிக்கைகள்
மகத்தானவை
இன்றும் அதுபற்றியே அரசு பேசுகிறது
வெளிநாட்டுப் பிரமுகர்களையும் பேசவைக்கிறது
அந்த நடவடிக்கைகளால்
ஆயிரக்கணக்கான மக்கள்
வீடு வாசல்களை இழந்தார்கள்
வாழ்நாள் தேட்டத்தை இழந்தார்கள்
தோட்ட வருமானங்களை இழந்தார்கள்
தொழில்களை இழந்தார்கள்
சொந்தங்களை இழந்தார்கள்
பிள்ளைகள் கல்வியை இழந்தார்கள்
இனி இழப்பதற்கு எதுவுமே
இல்லை என்ற நிலையில்
பிச்சைக்காரர்களாக
அகதி முகாம்களில் கிடக்கின்றார்கள்
ஒருவேளை சாப்பாட்டுக்கு
ஒரு மைல் கியூவில் நிற்கின்றார்கள்
இந்த அவலங்களை
யாரும் கண்டுகொள்ள முடியாதபடி
சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்
இந்த மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றி
அரசுதப்பினர் வானளாவப் புகழ்கிறார்கள்
அரச உத்தியோகத்தர், வர்த்தகர்,
கல்விமான்கள் அத்தனை பேரும்
ஏற்றத் தாழ்வின்றி, வாழ்க்கை வசதிகளின்றி
ஒன்றாய்க் கிடக்கிறார்கள்
ஆகா! என்னே மனிதாபிமானம்!

தமிழின்பன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அது ஒரு கனாக்காலம்

தேவனால்
தெரிவுசெய்யப்பட்ட
பூமியின் புதல்வர்கள்
நாங்கள்

அதனால்தான்
இஸ்ரவேலரைப் போல்
அடிக்கடி இடம்பெயர்கின்றோம்

ஆனாலும்
சிதறிய இடத்திலெல்லாம்
ஒளிரும் நட்சத்திரங்கள்
நாங்கள்

யூதமரத்தைப் போல்
வேற்றிடங்களில்
கிளை பரப்பி
வேரூன்றியிருந்தாலும்
எம்
முன்னோர்களின் பட்டியலை
சில வருடம்
முன்னகர்த்திப் பார்த்தால்
விஞ்சுவது
ஓர் உயிர்த்துளி மட்டுமே
ஆபிரகாமுடையதைப் போல

மரண வீட்டிற்கும்
மண வீட்டிற்குமான
ஆயிரம் அர்த்தங்களை
இங்குதான் கற்கவேண்டும்

மரணத்திற்கு
மைக் செட்டில்
துக்கம் வெளியிடும்
கலாசாரம் இன்னுமில்லை

அந்த 'உரிமைக் கஞ்சி'யின்
அர்த்தங்களை
இங்கு
சோடா போத்தல்களால்
சொல்ல முடிவதில்லை

அங்கு
மணவறையின் திசையை
கூலிக்குப் பிடித்தவன்
கூறுவதில்லை

பந்திக்கு உணவு
எங்கள் பட்டாளந்தான்
பம்பலாய்ச் செய்து முடிக்கும்
இங்கு
எமக்குச் சம்மந்தமில்லாத
எவனோ ஒருவன்
எமது உப்பையும் புளியையும்
தீர்மானிக்கிறான்

இப்படியெல்லாம்
கலை, கலாசார திமிரோடு
வாழ்ந்த நாங்கள்
இப்போது
கடந்த கால நினைவுகளை
சுவாசித்துக் கொண்டு
எங்கோ ஒரு
நகரத்தின் தூசியில்
கலந்துகொண்டு
கரைந்து கொண்டிருக்கிறோம்
என்பதுதான் நிஜம்

முத்தூர் - ஆதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



*மொழி என்பது ஒரு மனிதனின் அடையாளம்! உலக நாகரீகத்தின் அளவுகோலாக மதிக்கப்படுவது மொழியாகும்!*

# கலை இலக்கிய விழாவில் தமிழ்நேசன் அடிகளார்

சித்திரைப் புத்தாண்டையொட்டி மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்த கலை இலக்கிய விழா கடந்த 17.04.2010 அன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்தியக் கலாநிதி எஸ்.லோகநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தலைமை உரை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர்:

"மொழி என்பது ஒரு மனிதனின் அடையாளம். உலக நாகரிகத்தின் அளவுகோலாக மதிக்கப்படுவது மொழியாகும். இந்த மொழியை வளர்க்க ஒவ்வொரு இனத்தவரும் பாடுபடுகின்றனர். 15ம் லூயி என்ற பேரரசன் தன் பிரெஞ்சு மொழியைப் பாதுகாக்க 1525ம் ஆண்டு பிரெஞ்சுக் கலைக் கழகத்தை உருவாக்கினான். ஆனால் வளமாக வாழ்ந்த நமது பண்டைத் தமிழ் மக்கள் தம் தாய்மொழியாம் தமிழ் மொழியை வளர்ப்பதற்காக 2000 ஆண்டுகளுக்கு முன்பே பல சங்கங்களை நிறுவி தமிழை வளர்த்துள்ளனர். அதனால்தான் 'சங்கம் வளர்த்த தமிழ்' என்ற அடைமொழி தமிழுக்கு வந்தது" என மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் 17ம் திகதி சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டையொட்டிய கலை இலக்கிய விழாவில் தலைமை உரை ஆற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



"இதென்ன கிறுக்கல் எழுத்து வாசிக்கவே முடியல்ல. யார் எழுதினது?"

"நீங்கதான் டொக்டர்"

• மணி

அங்கு மேலும் அவர் கூறுகையில்:

இன்று தமிழை வளர்க்க தமிழ் பேசும் மக்கள் தாம் வாழும் இடங்களில் எல்லாம் பல அமைப்புகள், கழகங்கள், சங்கங்களை உருவாக்கி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உழைத்துக்கொண்டிருக்கின்றனர்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்றும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும் தமிழின் உயர்வை சிலாகித்துச் சொன்னார் மகாகவி பாரதி. "தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றும் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்றும் மகிழ்ச்சிக் கூத்தாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

நமது தாய் மொழியாம் தமிழ் மொழி இன்று செம்மொழி என்ற உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுள்ளது. உலக மொழிகளில் முதன் முதலில் கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியுந்தான் செம்மொழிகள் என்று கருதப்பட்டன. பின்னர் வடமொழியையும் செம்மொழியாக ஏற்றுக்கொண்டார்கள். இந்த மூன்று மொழிகளோடு அண்மை ஆண்டுகளில்தான் தமிழ் மொழியையும் செம்மொழியாக உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் 'உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை' நிறுவி அதனூடாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளைப் பல்வேறு இடங்களில் நடத்தினார். இவ்வாண்டு யூன் மாதம் தமிழ்நாட்டின் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இது உலகெங்கும் வாழும் தமிழ் அறிஞர்களின் மாபெரும் ஒன்றுகூடலாக அமையும்.

மன்னார் மாவட்டத்தின் கலை இலக்கியங்களைப் பேணவும், வளர்க்கவும் கலைஞர்கள் மற்றும் இலக்கியவாதிகளை ஒன்றிணைத்து ஊக்கப்படுத்தவும், அவர்களின் ஆற்றல் திறமைகளை வெளிக்கொணரவும் ஓர் உறுதியான, செயற்திறன் வாய்ந்த அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்ற தேவை மன்னாரில் பல காலமாகவே உணரப்பட்டு வந்துள்ளது. எனவே சாதி, இன, மத, அரசியல் பேதமற்ற முறையில் மன்னார் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களையும், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதான வலுவான ஒரு கலை இலக்கிய அமைப்பாக "மன்னார் தமிழ்ச் சங்கம்" என்ற பெயரில் இந்தக் கலை இலக்கிய அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இன்றைய எமது கலை இலக்கிய விழா எமது நோக்கத்தின் ஒரு சிறு பகுதியாக அமைகின்றது எனத் தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

**தகவல்: லவ்சன்**

**மன்னார் தமிழ்ச் சங்கம்**

# கடுகுக் கதை 25 மறுமணம்

அன்டன், சிவராமனை ஒருவழியாக சம்மதிக்க வைத்து விட்டார். சிவராமனும் அன்டனும் அலுவலக சக ஊழியர்கள். சிவராமனின் மனைவியும், பிள்ளைகளும் சுனாமியில் அள்ளுண்டு போய்விட்டார்கள். சுமார் ஆறு ஆண்டுகளாகத் தனிமையில் வாழ்ந்து வருபவர்தான் சிவராமன். மறுமணம் செய்யச் சொல்லி அன்டன் அவரை வற்புறுத்துவார். எனினும் சிவராமன் மறுத்துக்கொண்டே வந்தார்.

இன்றுதான் சிவராமன் உடைந்துபோய் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார். "அன்டன், எனக்கு தனிமை வெறுத்துவிட்டது. எனக்கு அன்பு வேண்டும். எனக்கு ஒரு நல்ல பெண்ணாகப் பாருங்கள். உடற்சுகத்திற்காக நான் இம்முடிவுக்கு வரவில்லை. என்ட பென்சன் யாருக்காவது, என்ட சாவுக்குப் பிறகு உதவோனும். அநியாயமாகப் போகக் கூடாது"

"எப்படியான பொம்புளயைப் பாக்கோணும்?" அன்டன் கேட்டார்?



"இளம் பெண்ணாக வேண்டாம்; கிட்டத்தட்ட என்ர 40 வயதளவில் போதும். புருசன இழந்த கைம் பெண்ணாக இருக்கோணும்; பிள்ளைகள் இருக் கோணும்; எந்தச் சமயமாகவும் இருக்கலாம்; சீதனம் வேண்டாம். ஆனால், அன்பு காட்டுபவளாக இருக்க வேண்டும்"

அன்டனின் மனதில் சிவராம் 'வானமே அண்ணாந்து பார்க்கும் உயரத்திற்கு' உயர்ந்து விட்டார்.

**- பற்றி**




## குறும்(புப்)பா - 39

சுவையான பழத்தட்டு முன்னால்
கூடான பலகாரம் பின்னால்
இவையோடு அல்வாவும் இலட்டுந்தா னிருந்தாலும்
இயலாதே சீ!சீ!இது கசப்பு!

**- மலர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# கிறிஸ்தவத்தில் கிரேக்க - உரோமைய கலாசாரத்தின் செல்வாக்கு

அக்காலத்தில் பாலஸ்தீன நாடு தன் வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இதன் விளைவாக அங்கு பல அந்நியப் பண்பாடு, கலாசாரங்களின் தாக்கத்திற்குட்பட்டிருந்தது. இவற்றுள் சிறந்ததாய் கிரேக்கப் பண்பாட்டுக் கலாசாரத்தைக் குறிப்பிடலாம். கிரேக்கப் பேரரசு மகா அலெக்சாந்தரின் தலைமையின் கீழ் கி.மு 333ல் பாலஸ்தீன நாட்டைக் கைப்பற்றியது. மத்திய கிழக்கிலிருந்து இந்தியா வரையிலுமான அனைத்து நாடுகளையும் கைப்பற்றிய மகா அலெக்சாந்தர் அந்நாடுகளிலெல்லாம் கிரேக்க மொழி, பண்பாடு, கலாசாரம், நாகரீகத்தை பலாத்காரமாய்த் திணித்துப் பரப்பினான்.

தன் நாடுகள் எல்லாம் ஒரே அரசு, ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே நாகரீகம் கொண்டதாய் இருக்கவேண்டும் என விரும்பினான். இதனைப் பலஸ்தீன யூதர்கள் எதிர்த்து கடுமையாய்ப் போராடினர். இருப்பினும் பலஸ்தீனாவிலும் கிரேக்க மொழி, பண்பாடு, நாகரீகம், கலாசாரம் என்பன நுழையவே செய்தது. கிரேக்க நாகரீகமானது சோக்ரடீஸ், அரிஸ்டோட்டில், பிளேட்டோ போன்ற தத்துவ ஞானிகளின் தத்துவக் கருத்துகளைக் கொண்டு விளங்கியது. கி.மு 63ல் உரோமையப் பேரரசு பொம்பேயின் தலைமையின்கீழ் பலஸ்தீனாவைக் கைப்பற்றியது. உரோமையர் தமக்குக் கீழ்ப்பட்ட நாடுகளில் தொடர்ந்தும் கிரேக்கப் பண்பாடு, மொழி, கலாசாரம், நாகரீகத்தைப் பேணி வளர்த்தார்கள். ஏனெனில் கிரேக்கத் தத்துவங்கள், சிந்தனைகள், இலக்கியங்கள் உலகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தன.

கிரேக்க மொழியே எல்லோராலும் விரும்பிக் கற்கப்பட்டும், பேசப்பட்டும் வந்தது. எனவே அக்கால கட்டத்தில் உரோமையப் பேரரசின் நாகரீகம் கிரேக்க - உரோமைய நாகரீகம் என அழைக்கப்பட்டது. உரோமையப் பேரரசெங்கும் கிரேக்க உரோமைய நாகரீகத்தின் தாக்கம் பரவலாகவிருந்த பின்னணியிலேயே கிறிஸ்தவமும் பலஸ்தீனாவில் தோற்றம் பெற்றது.

அக்காலத்தில் உரோமையப் பேரரசில் மூன்று முக்கியமான கிரேக்க தத்துவ இயக்கங்கள் காணப்பட்டன. அவையாவன: நோஸ்டிக்கம், ஸ்தோயிக்கம், பிளேற்றோனிசம் என்பன.

இதில் நோஸ்டிக்கம் என்பது அறிவாளிகள், ஞானமார்க்கர் என அழைக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சில யூத, கிறிஸ்தவ அஞ்ஞான மதச் சிந்தனைகள், கருத்துகள் வழிபாடுகளின் தொகுப்பாகிய நோஸ்டிக்கம் இறைவன், உலகம், மனிதன், துன்பம் போன்றவற்றுக்கு விளக்கமளித்தது. அனைத்திற்கும் விடையளிக்கும் ஆற்றல், அறிவு தங்களுக்கே வெளிப்பட்டிருப்பதாய் இவர்கள் கருதினர். இவர்களின் கருத்துப்படி ஒன்றுக்கொன்று முரணான எதிரான சடப் பொருள் உலகு, ஆவியின் உலகு என இரு உலகுகள் உள்ளன. சடப்பொருள் உலகம் தீயது; ஆவியின் உலகம் நல்லது. சடப்பொருளுக்கும் ஆவிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆவியாகிய கடவுள் தீயதாகிய சடப்பொருள் உலகைப் படைக்கவில்லை. எனவே ஆவியாகிய நல்ல கடவுளிடமிருந்து புறப்பட்ட "ஜயோன்" என அழைக்கப்படும் சக்திகளில் சில அவரிடம் இருந்து வெகு தொலைவில் சென்று தீயவையாக மாறின. இவ்வாறு மாறிய தீய சக்தி ஒன்றே ஏற்கனவே மாறிய தீய சடப்பொருளைக் கொண்டு சடப்பொருள் உலகைப் படைத்ததென்பது நோஸ்டிக்கரினது அடிப்படைக் கோட்பாடாகும். இவைகள் மூலம் பலவிதமான நோஸ்டிக்கேயக் கொள்கைகள் தோன்றலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ச்சி...


# சிறுநீரகங்களின் தொழிற்பாடும் செயலிழப்பும்

**பலவீனமான அல்லது சிறிதளவு பழுதடைந்த சிறுநீரகங்களை இயன்றளவு கூடிய காலம் தொழிற்படச் செய்யவேண்டியவை:**

01. உடல் உயரத்திற்கேற்ப நிறையைப் பேணுதல்.

02. குருதியில் சீனியின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

03. குருதியமுக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.




04. சிறுநீகரகங்களைப் பாதிக்கும் தேவையற்ற மருந்துகளைத் தவிர்த்தல்.

05. உடலில் மேலதிக நீர் சேருவதையோ, கூடுதலான நீர் வெளியேறுவதையோ தவிர்த்தல்.

06. சிறுநீரகத்தில் தொற்று வந்தால் உடனடியாகக் குணப்படுத்தல்.

07. இயன்றளவு புரதம், உப்பு, பொற்றாசியம் உள்ள உணவுகளைத் தவிர்த்தல்.

இவ்வாறு உடல்நிலையைப் பேணுவதன் மூலம் சிறுநீரகங்களின் தொழிற்பாட்டை நீடிக்கச் செய்யலாம்.

**சிறுநீரகச் செயலிழப்பு உள்ளவர்கள் பின்பற்றவேண்டிய உணவு முறை**

நமது உடலில் சிறுநீரகங்கள் பல்வேறு பணிகளை ஆற்றுகின்றன.

01. உடலில் உள்ள நீரின் அளவைப் பேணுதல்.

02. கனியுப்புகளின் அளவைப் பேணுதல்.

03. கழிவுகளை அகற்றுதல்.

சிறுநீரகம் செயலிழக்கின்றபோது இச்செயன்முறை படிப்படையாகப் பாதிப்படையும். இந்நிலையில் நாம் உண்ணும் உணவுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அல்லது மாற்றியமைப்பதன் மூலம் சிறுநீரக நோயின் விளைவுகளை ஓரளவு குறைக்கலாம்.

சாதரணமாக நாம் உண்ணும் உணவில் 50% காபோஹைதரேற்றும் 30% கொழுப்பும் 20% புரதமும் எடுக்கப்படுகிறது.

காபோஹைதரேற்றானது அரிசி, கோதுமை, கிழங்கு, சீனி முதலிய உணவு வகைகளில் கூடுதலாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



"அந்த டொக்டர்ர நாவல எப்பிடி கொம்போஸ் பண்றாங்களோ தெரியாது... எழுத்து விளங்காதே"

"கொம்போஸ் செய்யிறவர் அவரிட்ட வேல செய்யிற கொம்பவுண்டர்தான்"

● மணி

கொழுப்பானது இறைச்சி, எண்ணெய் வகைகள், பால், பட்டர் முதலியவற்றில் காணப்படுகின்றது. புரதமானது மீன், பால், பருப்பு வகைகள், சோயா, இறைச்சி முதலிய உணவுகளில் காணப்படுகிறது. சில உணவு வகைகளில் காணப்படுகின்ற சில இரசாயனங்கள் சிறுநீரகத்தால் கழிவாக அகற்றப்படும்.

எமது இரத்தத்தில் பல வகையான கனியுப்புகள் (உ+ம்: சோடியம், பொற்றாசியம், யூரியா) இருக்கின்றன. அவை அளவுக்கு அதிகமானாலோ அல்லது குறைந்தாலோ ஆபத்து ஏற்படும். உணவு மூலம் பெறப்படும் கனியுப்புகள் இரத்தத்தில் சரியான அளவுகளில் இருக்க சிறுநீரகங்களே காரணமாகும். அவை செயலிழப்பின் நாம் நமது உணவு முறைகளை மாற்றியமைப்பதன் வழியாகவே இரத்தத்தில் அவற்றின் அளவைப் பேணமுடியும். மற்றும் ஏற்கனவே சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானவர்கள் அதற்கு மேலதிக வேலைப் பளுவைக் கொடுப்பின் விரைவில் அவை முற்றாகச் செயலிழக்கும் அபாயம் உண்டு. ஆகையால் சிறுநீரகங்களின் வேலையை அதிகப்படுத்தும் உணவுகளைக் குறைத்தல் நன்று.

– இன்னும் வரும்....

● **தொகுப்பு: சித்தன்**

## மணிக்கதை — ஊருக்குபதேசம்

"மந்திரியாரே இது ஒரு அற்புதமான கருவி. இதை நம் பொது மக்களுடைய வீடுகளிலெல்லாம் பொருத்திவிடவேண்டும். மக்களில் யாராவது பொய் பேசினால் அதை உணரும் கருவி நமது அரண்மனைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு சமிக்ஞை அனுப்பும். குறித்த இலக்கத்திற்குரிய சிவப்பு லைற் எரியும். உடனே அந்த அந்த வீட்டிற்குச் சேவகரை அனுப்பி ஆளைப் பிடித்து வந்து தண்டிக்கலாம். புரிகிறதா?" சம்மதித்தார் மந்திரி. மிக வேகமாகக் கருவிகள் வீடுகளெல்லாம் பொருத்தப்பட்டன. அவ்வப்போது விளக்குகள் மின்னியவுடன் வீரர்கள் பாய்ந்து சென்று ஆளைப் பிடித்து வந்து தண்டனையும் வழங்கினர். படிப்படியாகப் பொய் சொல்வோரின் தொகை குறைந்து போனது. அண்டை நாட்டினர் மூக்கில் விரல் வைத்து நோக்கினர். ஒருநாள் அரண்மனைக் கட்டுப்பாட்டு அறையில் எல்லா விளக்குகளும் ஒளிர்ந்தன. பதறிப்போன மந்திரி சகல படைவீரர்களையும் ஏவினார். வீட்டுக்கு வீடு விரைந்து போய்க் குற்றவாளிகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.

ஒரு மணி நேரங் கடந்தது. ஒளிர்ந்த விளக்குகள் அணைந்தன. போன வீரர்கள் சோகத்துடன் மீண்டனர். அரசனும் சபைக்கு வந்து "ஏன் எல்லா விளக்குகளும் ஒரே நேரத்தில் ஒரு மணி நேரமாய்த் தொடர்ந்து எரிந்தன?" என்று கோபமாய்க் கேட்டார். "அரசே, எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சி வேலை செய்தது. அதில் தங்களது நேரடிப் பேட்டி கடந்த ஒரு மணித்தியாலமாக ஒளிபரப்பாகியது. அதுதான் சிக்னல் லைற் எல்லாமே...." மந்திரி முடிக்கவில்லை, அரசன் விக்கித்துப் போனான்.



● **பைந்தமிழ்க்குமரன் டேவிட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய 'ஊடகவியல்' என்னும் நூலை அண்மையில் வாசிக்க நேர்ந்தது. ஆகஸ்ட் 2009ல் முதலாம் பதிப்பு வெளிவந்தது.

அதில் அவரது முன்னுரையை வாசிக்கும்போது அவர் அதில் சொல்ல வந்த விடயங்கள் என்னவென்று விளங்கிவிடலாம்.

அதில் அவரது தன்னம்பிக்கை தெரிகின்றதா? துணிச்சல் தெரிகின்றதா? ஆனால் தம்பட்டம் இல்லையென்றே நான் நினைக்கின்றேன். அப்படியே முன்னுரையைத் தருகின்றேன் வாசித்துப் பார்த்து முடிவு செய்யுங்கள்.

## முன்னுரை

### ஏன் எழுதினேன்?

நான் கல்லூரியில் படிக்கும் காலத்தில் - 1950ம் ஆண்டிலே பத்திரிகைகளுக்குக் கதைகளும், கட்டுரைகளும் எழுதியவன். "வீரகேசரி", "சுதந்திரன்" பத்திரிகைகள் எனது ஆக்கங்களைப் பிரசுரித்திருக்கின்றன.

அன்றிலிருந்து பத்திரிகைகளுக்குச் சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதி வருகின்றேன். நான் எழுதிய கட்டுரைகளில் அதிகமானவை இலக்கியக் கட்டுரைகளே! அவற்றில் நாடகம் சிறப்பிடம் பெறும். இலங்கையின் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளும் எனது கட்டுரைகளைப் பிரசுரித்திருக்கின்றன. பின்பு அக்கட்டுரைகளை எனது நூல்களில் சேர்த்துள்ளேன். மாணவர்கள் எனது கட்டுரைகளை வாசித்தால், பத்திரிகைகளுக்கு இலக்கியக் கட்டுரைகள் எழுதுவது எப்படி என்று அறிந்துகொள்ளலாம்.

1954-1974 காலப்பகுதியில் 25 நவீன நாடகங்களை எழுதி, எனது ஊரான அராலியில் அரங்கேற்றினேன். 1980ம் ஆண்டிலிருந்து இலங்கை வானொலி ஊடாக இலங்கையர் எல்லோருக்கும் நாடக விருந்தளித்து வருகிறேன். ரூபவாஹினிக்கும் சில நாடகங்கள் அனுப்பினேன். ஒளிபரப்பினார்களா இல்லையா என்பது தெரியாது. ஒளிபரப்பாதிருந்தால் அது அவர்களது பிழை. வானொலிக்கு 500 நாடகங்கள் எழுதிய நாடகாசிரியருக்கு T.Vக்குப் பொருத்தமாக நாடகமெழுதத் தெரியாதா? எனக்குத் தொலைக்காட்சி பற்றியும் தெரியும்; படித்திருக்கிறேன். வானொலிக்கு எழுதுவதற்கும் T.Vக்கு எழுதுவதற்கும் இடையில் அதிக வேறுபாடு இல்லை. இதை விளக்கி இந்த நூலில் ஒரு தனிக் கட்டுரையே எழுதியிருக்கிறேன்.

இந்தத் தகுதியிலிருந்த இந்த நூலை எழுதத் துணிந்தேன். எனது அறிவையும் அனுபவத்தையும் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரமாகக் கிடைக்கச் செய்ய வேண்டாமா?

### ஊடகங்கள் மூலம் பல விடயங்களைக் கற்பிக்கலாம்

ஊடகவியல் (Media) என்பதில் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி என்பவை அடங்கும். ஊடகங்கள் மூலம் எத்தனையோ விடயங்களைச் சொல்லலாம்; கற்பிக்கலாம். பத்திரிகைகளை வாசித்துப் பாருங்கள், வானொலி கேளுங்கள், தொலைக்காட்சி பாருங்கள். இந்திய வானொலிகளில் எத்தனையோ விடயங்கள் பற்றிச் சொல்கிறார்கள். தொலைக்காட்சிகளில் செய்து காட்டுகிறார்கள். இலங்கை வானொலி, தொலைக்காட்சிகளில் கூட பல விடயங்களைச் சொல்கிறார்கள்; காட்டுகிறார்கள். அவை எல்லாவற்றையும் பாருங்கள், கேளுங்கள். அவற்றைச் சொல்லி மாளாது. நான் அவை பற்றி ஒன்றும் எழுதவில்லை. இப்பொழுது இலங்கையில் ஊடகவியல் கற்பிக்க ஒரு கல்லூரி ஆரம்பித்திருக்கிறார்களாம். யாழ்.பல்கலைக் கழகத்தில் கூட ஊடகவியல் கற்பித்து ஒரு டிப்ளோமா பட்டம் வழங்குகிறார்களாம். உங்களுக்கு வேண்டிய தகவல்களை ஊடகவியல் கற்பிப்பவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மொழிநடை பற்றி மட்டுமே எழுதியுள்ளேன்

ஊடகங்களுக்கு வேண்டிய மொழிநடை பற்றி மட்டுமே எழுதியுள்ளேன். யார், எதை, எவருக்குச் சொல்லிக் கொடுப்பதானாலும் அங்கே மொழி தேவைப்படுகிறது. ஊடகவியலை மாணவர்களுக்குக் கற்பிக்க மொழிதான் ஊடகம்! எந்த வகை மொழிநடையை எப்படியெல்லாம் கையாண்டால், சிறந்த பயனைப் பெறலாம் என்பதை மட்டுமே இங்கே விளக்கிக் கூறியுள்ளேன். அதோடு, எனக்கு நன்கு தெரிந்த, நான் ஏற்கனவே எழுதிய துறை சார்ந்த சில கட்டுரைகளையும் நூலில் சேர்த்துள்ளேன். இலங்கையில் வேறு யாரும் இப்படியொரு நூலை இன்னும் எழுதவில்லை என்று நினைக்கிறேன்.

## நவீன இலக்கியங்களைக் கற்பித்தல்

ஊடகவியல் இப்பொழுது பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுகிறது. அது விரைவில் பாடசாலை மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும் என்கிறது அரசாங்கம். தகவல் தொழில்நுட்பவியலும் ஒரு நல்ல பாடம். அப்பாடத்தைப் படித்தால் மாணவர்களது வாழ்க்கை வளமுறும். அதை எல்லோரும் கற்கவேண்டும். அதை எல்லா மாணவர்களுக்கும் கற்பிக்கப்போகிறோம் என்று அரசாங்கம் சொல்கிறது. இந்தப் பாடங்களை மாணவர்கள் நாட்டுக்கூத்து மொழியிலும், புராண இதிகாச மொழியிலுமா கற்கப் போகிறார்கள்? நவீன தமிழ்தான் அவர்களுக்குக் கை கொடுக்கும்.



"அவர்ர நாவலப் பாராட்டி இவ்வளவு வாசகர் கடிதங்கள் வந்திருக்கு...!"

"எல்லாம் அவர் அனுப்பினதுதான்"

• மணி

நாட்டுக் கூத்துகளையும் புராண இதிகாச நாடகங்களையும் பாடப் புத்தகங்களிலிருந்து அகற்றிவிட்டு, அவற்றில் நவீன நாடகங்களைப் போடுங்கள். இந்தக் காலத்தில் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும், சீவகசிந்தாமணியையும் கற்று ஒரு பிரயோசனமும் இல்லை. அவற்றை நீக்கிவிட்டு எங்களது சமகால வாழ்க்கைக்கு விளக்கமாக அமையும் நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரைகள் போன்ற நவீன இலக்கியங்களைப் பாடப் புத்தகங்களில் போடுங்கள் என்று நான் நீண்ட காலமாகவே எழுதி வருகின்றேன். அந்தக் கருத்தை விளக்கமாகக் கூற "நவீன இலக்கியங்களைக் கற்பித்தல்" என்ற ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளேன்! நான் கூறிவந்ததை, இதுவரை எவரும் மறுத்துரைக்கவில்லை.

நான் தீர்க்கதரிசியல்ல. அந்தக் கருத்தை நான் எந்த நூலை வாசித்தும் அறியவில்லை. எங்கள் மாணவர்கள் என்ன என்ன படிக்கிறார்கள்? வருங்காலத்தில் அவர்கள் எதை எதையெல்லாம் கற்கவேண்டி வரும்? அவற்றை எப்படிக் கற்கப் போகிறார்கள்? அதற்கு உதவக்கூடிய மொழிநடை எது என்று சிந்தித்தேன். எனது சிந்தனைத் தோட்டத்தில் பூத்த நறுமலர் அது. இப்பொழுது அதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பாடப் புத்தகங்களில் இப்பொழுதே பல திருத்தங்கள் செய்துவிட்டனர். நவீன இலக்கியங்களை இன்னும் கூடுதலாகச் சேர்க்கவேண்டும்.

## இலங்கையர் எல்லோருக்கும் பேசுகிறேன்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற காலத்தில் நான் மேடையில் அழகாகப் பேசுவேன். பேச்சுப் போட்டியில் எனக்குப் பல பரிசுகளும் கிடைத்திருக்கின்றன. தமிழ்ச் சங்கத்தில் நடந்த பல விவாதங்களில் நான் தமிழ்ச் சங்கக் குழுவில் இருந்திருக்கிறேன். நானே தலைமை தாங்கி பல கலந்துரையாடல்களையும் நடத்தியிருக்கிறேன்.

"பேராதனைப் பல்கலைக்கழகத்திலே எமது ஒரு சாலை மாணவராக விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, தமிழ்ச் சங்கமும் இந்து மாணவர் சங்கமும் நடத்திய விவாதப் போட்டிகள், கருத்தரங்குகளில் பங்குபற்றி, தம்முடைய கருத்துகளைத் துணிந்து வெளியிட்டு, சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர்"

"கெட்டிக்காரர்கள்" நூல் முன்னுரையில் தமிழ்ப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை.

"பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பழகிய காலத்தில் சுந்தரம்பிள்ளைக்குத் தமிழிலும் இலக்கியத்திலும் நிறைந்த ஆர்வமும் பற்றும் இருந்ததினை நான் நன்கு அறிவேன். அக்காலத்தில் அவர் பல்கலைக்கழகத்தில் நகைச்சுவையாகவும் உணர்ச்சிகரமாகவும் பேசக்கூடிய ஒரு பேச்சாளரகத் திகழ்ந்தவர்" முதலாம்பிள்ளை நூல் முன்னுரையில் பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன்.

"வெளி உலகத்திற்குச் சென்றால் உனது பேச்சுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்" என்று எனது நண்பர்கள் கூறினர். நானும் அப்படித்தான் எதிர்பார்த்தேன் நடந்ததோ எதிர்மாறு.

நான் சிங்களப் பாடசாலையில் ஆங்கிலம் கற்பித்தேன், ஐந்து ஆண்டுகள். அடுத்து முஸ்லிம் பாடசாலையில் இரண்டு ஆண்டுகள். மாற்றலாகி யாழ்ப்பாணம் வந்தபொழுது, இங்கே எழுத்தாளர்கள் குழுக்களாகப் பிரிந்திருப்பதைக் கண்டேன். ஒவ்வொரு குழு நடத்துகின்ற கூட்டங்களிலும் அந்த அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களே பேசுவார்கள். மற்றவர்கள் சேரமுடியாது. நான் ஒரு குழுவிலும் சேரவில்லை. அதனால் எனக்குப் பேசச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அந்தக் கூட்டங்களில் பெரிய இலக்கிய விடயங்கள் எதுவும் அலசப்படுவதில்லை. எல்லாம் இந்த நூல் வெளியீட்டு உரைகள்தான்.

நான் எனது நூல்களுக்கு வெளியீட்டு விழாக்கள் நடத்துவதில்லை. நவீன நாடகங்கள் எழுதாதவர்கள் வந்து, புதிதாக என்னத்தைச் சொல்லிவிடப் போகிறார்கள்? அவர்கள் எதைச் சொன்னாலும் எனக்கு ஒன்றுதான்.

நான் ஏன் பேசுவான்? நான் எழுதியவற்றைத்தான் இலங்கை வானொலி வீட்டுக்கு வீடு பேசுகிறதே! பல்கலைக்கழகத்தில் ஐம்பது, நூறு மாணவர்களுக்குப் பேசினேன். இப்பொழுது இலங்கையர் எல்லோருக்கும் பேசுகிறேன்.

## புலிகளின் குரலுக்கு நாடகம் எழுதினேன்

யாழ்ப்பாணக்குடா நாடு புலிகளின் ஆதிக்கத்தில் இருந்த காலத்தில், அவர்களது கூட்டங்கள் மட்டுந்தான் நடக்கும். புலிகளின் கூட்டங்களில் பேசுவதற்கு ஒரு குழு இருந்தது. எல்லாக் கூட்டங்களிலும் அந்தக் குழுவே பேசும்.

அவர்களது பேச்சுக் குழுவில் இருந்தவர்களால் நாடகம் எழுத முடியாததினால், என்னிடம் கேட்டார்கள் "புலிகளின் குரல்" வானொலிக்கு நாடகம் எழுதும்படி.

"நான் போர் பற்றி எழுதமாட்டேன். போர்க்காலத்தில் மக்கள் படும் துன்பங்களைச் சித்தரிக்கும் நாடகங்களை எழுதுவேன். முதலாம் பிள்ளை என்ற பெயரில் ஒலிபரப்புங்கள்" என்றேன். சரி என்றார்கள். அப்படியே



## சிறார் பாதுகாப்பிற்கு உழைப்போருக்கு திருத்தந்தை ஊக்கம்

வன்முறை, பயன்படுத்தல், பாராமுகம் ஆகியவற்றுக்குப் பலியாகும் சிறாருக்கு ஆதரவு அளிக்கும் நோக்கத்தில் இத்தாலியத் தேசிய நாளைக் கடந்த 14 ஆண்டுகளாக ஊக்குவித்து வரும் 'மீட்டர்' என்ற கழகத்துக்குத் தனது சிறப்பு வாழ்த்தினை திருத்தந்தை தெரிவித்தார். பங்குகளிலும் பள்ளிகளிலும் கழகங்களிலும் சிறாருக்காகப் பணியாற்றும் அனைவருக்கும் குறிப்பாக பெற்றோர், ஆசிரியர்கள், அருட்பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்ததோடு இந்த இறையழைத்தல் ஞாயிறன்று அவர்களை இப்பணியில் உற்சாகப்படுத்துவதாகவும் திருத்தந்தை கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்தார்கள். 25 நாடகங்கள் எழுதினேன். இருந்தாலும் புலிகள் என்னைத் தங்களுடைய ஆளாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பல விழாக்கள் கூட நடத்தியிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றுக்குக் கூட அவர்கள் என்னை ஒரு பேச்சாளனாக அழைக்கவில்லை.

## கதாநாயகன் இல்லாமல் நாடகங்கள் நடத்தினர்

2006ம் ஆண்டிற்கு முன்பு யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வித்தியானந்தனுக்கு நினைவு அஞ்சலிக் கூட்டங்கள் நடாத்தினார்கள் புலிகள். அந்தக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க என்னைத் தான் அழைத்திருக்கவேண்டும். பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்த பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்து அந்த இரு பேராசிரியர்களும் காட்டிய வழியில் நாடகப் பணி செய்துவருபவன் நான் ஒருவன் தான். அது மட்டுமல்ல, பேரதனைப் பல்கலைக் கழகத்தில் அந்த இரு பேராசிரியர்களதும் காலத்தில்தான் இலங்கை மண்வாசனை நாடக இயக்கம் தோன்றியது என்று கூறி, அந்த இரு பேராசிரியர்களது பெயர்களுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பெருமையையும் எடுத்துக் கூறி வருபவன் நான் ஒருவன்தான். கூட்டங்களில் பேசுவதற்கல்ல, கூட்டத்திற்கு வா என்றுகூட எனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

வித்தியானந்தனுடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் தலைமை வகித்தார்கள்; யார் யாரோ எதையெதையோ பேசினார்கள்; மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டது போல. வித்தியானந்தனது பணிகளும் சரியாகச் சொல்லப்படவில்லை. நாடகங்கள் இனிதே நிறை வுற்றன, கதாநாயகன் இல்லாமலே!

விழாக்களில் பேசுவதற்கு என்னை அழைக்க வேண்டாம் என்று யாராவது புலிகளைத் தடுத்திருக்கலாம், என்னை மறைப்பதாக நினைத்துக்கொண்டு. என்னை மறைக்க முடியுமா? சிரிப்புத்தான் வருகிறது.

## எல்லாம் நன்மைக்கே!

எல்லாம் நன்மைக்கே. விழாக்களில் பேச அவர்கள் என்னை அழைத்திருந்தாலும் எனது சொந்தப் பெயரிலே நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டிருந்தாலும், நானும் புலிகளுடன் சேர்ந்து வன்னிக்கு ஓடினாலும் ஓடியிருப்பேன். வன்னிக்குப் போனவர்கள் 7 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வந்தார்கள், காய்ந்து கறுத்து. நான் போயிருந்தல் திரும்பி வந்திருப்பேனா என்பது சந்தேகமே! 2006ம் ஆண்டு போனவர்கள் இப்பொழுது வந்திருக்கிறார்கள். அவர்களில் யார் யார் வந்திருக்கிறார்கள், எங்கெங்கே என்னென்ன கோலங்களில் வந்திருக்கிறார்கள் என்பது கூடத் தெரியவில்லை. நானும் தேடிக்கொண்டிருக்கிறேன், எனது மருமக்களையும் மற்றும் உறவினர்களையும் நண்பர்களையும்!

வன்னிக்குப் போகாததால் இங்கே வீட்டில் இருந்துஇலக்கியம் படைத்தேன். கொஞ்சமா? நூற்றுக்கும் அதிகமான நாடகங்கள், இத்துடன் இருபது நூல்கள்.

## மேடைப் பேச்சும் எழுத்தும்

எனக்குப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்காததும் நல்லதாகவே போய்விட்டது. பேசுவதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தால், நான் எனது எழுத்தை அலட்சியம் செய்தாலும் செய்திருப்பேன், எனது பல்கலைக்கழக நாட்களில் செய்ததைப்போல. அந்த நாட்களில் நிறையப் பேசினேன்; ஒன்றும் எழுதவில்லை, பரீட்சைகளுக்கு எழுதியதைத் தவிர.

பேச்சை யார் கேட்கிறார்கள்? இந்தக் காலத்தில் எல்லோருந்தான் மேடையேறிப் பேசுகிறார்கள். தகுதி இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன?அவற்றை ஒருவரும் சீரியஸாக எடுப்பதில்லை. ஒரு காதால் கேட்டு மறுகாதால் வெளியே விட்டுவிட்டுப் போய்விடுவார்கள், அந்த இடத்திலேயே.

எழுத்து நிரந்தரமானது, நீண்ட காலம் வாழ்ந்திருப்பது, பலரது கூரிய பார்வைக்கு உட்படுத்தப்படுவது. அதை மிகுந்த கவனம் எடுத்து எழுதவேண்டும். நான் அப்படித்தான் எழுதினேன், எனது நாடகங்களையும் கட்டுரைகளையும் நூல்களையும். நான் இறந்த பிறகும் எனது நூல்கள் வாழும்.

– ந.சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 07 - 2010

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 88

(எண்ணிக்கை 23:1-30)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

பிலயாம் பாலாக்கிடம், "எனக்காக இங்கு ஏழு பலி பீடங்களை எழுப்பும்; எனக்காக இங்கு ஏழு காளைகளையும் ஏழு கிடாய்களையும் தாரும்" என்றார். பிலயாம் சொன்னபடியே பாலாக்கு செய்தான்; பிலயாமும் ............................................ ஒவ்வொரு பலி பீடத்திலும் ஒரு காளையையும் ஒரு கிடாயையும் பலியிட்டனர். பிலயாம், பாலாக்கைப் பார்த்து, "உம் எரிபலியருகே நின்றுகொள்ளும்; நான் போகிறேன்; அவர் எதையெல்லாம் எனக்குக் காண்பிக்கிறாரோ அதை உமக்கு அறிவிப்பேன்" என்றார். பின் அவர் ................................................ நோக்கிப் போனார். கடவுள் பிலயாமைச் சந்தித்தார். பிலயாம் அவரிடம், "நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம் செய்து ஒவ்வொரு பலிபீடத்தின் மேலும் ஒரு காளையையும் ஒரு கிடாயையும் பலியிட்டுள்ளேன்" என்றார். ஆண்டவர் ஒரு ............................................ பிலயாமின் வாயில் வைத்து அவரிடம், "பாலாக்கிடம் திரும்பிப்போய் இப்படியே பேசு" என்றார். அவர் அவனிடம் திரும்பிப் போகையில் அவன் மோவாபின் எல்லாத் தலைவர்களோடும் தன் எரிபலியருகில் நின்று கொண்டிருந்தான். பிலயாம் திருஉரையாகக் கூறியது: "ஆராமிலிருந்து பாலாக்கு, ........................................ இருந்து மோவாபின் மன்னன், என்னைக் கொண்டு வந்துள்ளான். வா, எனக்காக யாக்கோபைச் சபி! வா, இஸ்ரயேலைப் பழித்துரை! என்கிறான். கடவுள் சபிக்காதவனை நான் எப்படிச் சபிப்பேன்? கடவுள் பழித்துரைக்காதவனை நான் எப்படிப் பழித்துரைப்பேன்? மலைகளின் உச்சியிலிருந்து நான் அவனை நோக்குகிறேன்; ............................................ அவனைப் பார்க்கிறேன். இதோ! தனியாக வாழ்கின்றதொரு மக்கள் கூட்டம். வேற்றினத்தாரோடு தன்னையும் ஓர் இனமாய்க் கொள்ளவில்லை; நான் நேர்மையாளர் இறப்பை அடைவேனாக! என் முடிவும் அவர் போன்று இருப்பதாக!" பின் பாலாக்கு .......................... "நீர் என்ன எனக்கு இப்படிச் செய்துவிட்டீர்! என் எதிரிகளைச் சபிக்க உம்மைக் கொண்டுவந்தேன்; ஆனால் நீர் ஆசி வழங்குகிறீர்! என்றான். அதற்கு அவர், "ஆண்டவர் என் வாயில் வைத்ததைப் பேசுவது என் கடமையன்றோ?" என்றார். பாலாக்கு அவரிடம், "வேறோர் இடத்திற்கு வந்து அங்கிருந்து சபியும்" என்றான். அவ்வாறே பிஸ்காவின் கொடுமுடிவில் ............................................ வயல்வெளிக்குக் கொண்டு போனான்; பலியிட்டான். ஆண்டவர் பிலயாமைச் சந்தித்தார். அவர் அவரது வாயில் ஒரு வார்த்தையை வைத்து, "பாலாக்கிடம் போய் இப்படியே பேசு" என்றார். அவர் அவனிடம் வந்து "பாலாக்கு கேள், ........................................ தீங்கினை ஆண்டவர் கண்டதில்லை. கடவுள் அவர்களோடு இருக்கிறார்" என்றார். பாலாக்கு பிலயாமிடம், "ஒருபோதும் நீர் சபிக்க வேண்டாம். ஆசி கூறவும் வேண்டாம்" என்றான். பின் "வேறொரு இடத்துக்கு வந்து அவர்களைச் சபியும்" என்றான். அங்ஙனமே பாலாக்கு பிலயாமைப் ................................. கொடுமுடிக்குக் கொண்டு போனான்; அது பாலை நிலத்தை நோக்கியவாறு அமைந்திருந்தது. பிலயாம் பாலாக்கிடம், எனக்காக இங்கு ஏழு .............................. கட்டும்; எனக்கு இங்கு ஏழு காளைகளையும் ஏழு கிடாய்களையும் ஏற்பாடு செய்யும்" என்றார். பிலயாம் சொன்னபடியே பாலாக்கு செய்து ஒவ்வொரு பலிபீடத்திலும் ஒரு காளையையும் ஒரு கிடாயையும் பலியிட்டான்.

**விடைகள் :** **பிலயாமிடம், யாக்கோபில், பலிபீடங்களை, சோபிம், பாலாக்கும், பெகோரின், வார்த்தையை, குன்றுகளிலிருந்து, கீழை மலைகளில், மொட்டை மேடு**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 88

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. 'ஆசிய ஜோதி' என அழைக்கப்பட்டவர்
(நேரு, மகாத்மா காந்தி, முகம்மதலி ஜின்னா)

2. டென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோபாவின் தாயும் இது
(போலந்து, ரஷ்யா, பிரான்ஸ்)

3. குருதிச் சுத்திகரிப்பு செய்யப்படும் நோய்
(இதய நோய், சர்க்கரை வியாதி, சிறுநீரகச் செயலிழப்பு)

4. 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்னும் வரியில் வரும் அண்ணல்
(இராமன், நளன், கோவலன்)

5. ஊக்கமது ..........................................................
(வேண்டும், கைவிடேல், அவசியம்)

6. 'உலகு மகிழ்ந்தது' என்னும் வாக்கியத்தில் வரும் 'உலகு' என்னும் சொல்
(முதலாகு பெயர், பொருளாகு பெயர், இடவாகு பெயர்)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 88
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் – 86 விடைகள்

ஆண்டவரிடம், கனானியரை, செங்கடல்சாலை, பாவம், கொள்ளிவாய்ப் பாம்பு, இய்யா அபாரிம், மத்தானாவுக்கு, சீகோனிடம், அர்னோன், பாசான்

## அறிவை வளர்ப்போம் – 86 விடைகள்

1) சீனா 2) மூன்று 3) அமெரிக்கா 4) கிர்கிஸ்தான்
5) முடவனுக்குக் கோபம் 6) அங்குச் சென்றான்

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவருமில்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- R. ஜூட் டிரோன்
  புனித மார்ட்டின் டி
  போரஸ் ஆலயம்,
  கித்துள்வெவ
- சு. சுபாஷன்
  பிரதான வீதி, தேற்றாத்தீவு 01
  தேற்றாத்தீவு

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 38 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** – 300/=
  ச. மேரிலின்ரா
  மின்சார நிலைய வீதி
  மூதூர் – 07
- **இரண்டாம் பரிசு** – 200/=
  S.G. மொன்ஷரா
  44, ஜயந்தி வீதி
  ஜயந்திபுரம்
  மட்டக்களப்பு
- 3ம் **பரிசு** – 100/=
  டொமினின்டன்
  – அன்றாடோ
  2ம் ஒழுங்கை
  மணற்சேனை
  கல்முனை

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்துவரும்.....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

**ஜூலை - 2010** கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.55 மணி

நாள்: 03, 04, 05, 06, 07, 08, 09, 17, 18, 19, 20, 21, 22, 23

சிறுவர் உலகம் - மாலை 7.00 மணி

நாள்:- 13. 27

புதிய உலகம் - மாலை 7.00 மணி

நாள்:- 11 25

நிகழ்ச்சித் தொகுப்பு: மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ. எண் - 44, மட்டக்களப்பு.

சனி, ஞாயிறு தினங்களில்: செபம், கத்தோலிக்க நற்சிந்தனை

சக்தி FM, காலை 5.00 மணி

வழங்குபவர்: அருட்தந்தை ஜொஹான் பேணாட்




## தனிப்பெரும் தலைமைக் குரு இயேசு

**ஆசிரியர் : பேரருட்தந்தை கலாநிதி பொன்னையா யோசப்**

குருக்களுக்கான இவ்வாண்டில் இயேசுவின் குருத்துவத்தையும், எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தை மையமாக வைத்து குருத்துவம் பற்றியும் ஆராயும் இந்நூல் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

குருக்கள் பற்றியும், குருத்துவம் பற்றியும் அதிகமாகப் பேசப்படும் இந்நாட்களில் இறைமக்கள் குருத்துவத்தின் மாண்பையும், பணியையும் வரலாற்றுப் பின்புலத்தில் அறிந்துகொள்ள இந்நூல் துணை செய்கிறது. ஏற்கனவே மூன்று நூல்களை வெளியிட்டுள்ள ஆயர் அவர்களின், காலப்பொருத்தமான நான்காவது நூல் இது.

**விலை: ரூபா 125/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media